# பாலாவி பஸ் - ரயில் விபத்தில் 17 பேர் பலி!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 156
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆடி 1 ஜமா, அவ் 12 வெள்ளிக்கிழமை [17-7-70]

அண்ணா கோப்பி
ஸ்தாபனத்தாரின்
முக்கிய அறிவித்தல்

எமது கோப்பியின் பெயரைச் சொல்லி போலிக் கோப்பிகளும் விற்பனையாகிறபடியால் கோப்பி வாங்கும்பொழுது உண்மையான அண்ணா கோப்பிதானா என்பதைக் கவனித்து வாங்குங்கள்.

அண்ணா இன்டஸ்றி,
இணுவில்.

## 45 பேருக்கு படுகாயம்

(நமது நிருபர்)

**ரயில் பஸ் கோரவிபத்தில் நேற்று 17 பேர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டனர். 45 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.**

புத்தளத்துக்கும் பாலாவிக்குமிடையிலுள்ள முள்வேலி என்ற இடத்தில் நேற்றுப்பகல் இவ்விபத்து நடந்தது. 9 பேர் அடையாளம் காணப்பட்டார்கள்.

பிரயாணிகளுடன் வந்து கொண்டிருந்த இ. போ. ச. பஸ் புகையிரதக் கடவையை அவசரமாகக் கடக்க முயன்றபோதே இக்கோர விபத்து நடந்ததாக அறிவிக்கப்படுகிறது.

புத்தளத்திலிருந்து கல்பிட்டி நோக்கி சீமெந்து ஏற்றிக் கொண்டு வந்த சீமெந்து கூட்டுத்தாபன ரயிலை முந்திக் கொண்டு பஸ் புகையிரதக் கடவையைக் கடக்க முயன்றதாம். பஸ்ஸில் சுமார் 60-க்கும் 75-க்குமிடையில் பிரயாணிகள் பிரயாணம் செய்ததாகத் தெரிய வருகிறது.

நேற்று நண்பகல் 12-45 மணிக்கு இவ்விபத்து நடந்தது. பஸ் சாரதி உயிர்தப்பினர். மிதிப்பலகையில் நின்ற சிலரும் காயங்கள் எதுவுமின்றி தப்பினர்கள்.

சிலாபம் புத்தளம் ஆஸ்பத்திரியில் சுமார் 45 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

1964-ம் ஆண்டு மீரிகமவில் நடந்த கோர விபத்துக்குப் பிறகு நடக்கும் அடுத்த கோர விபத்து என வர்ணிக்கப் படுகிறது.

ஸ்தலத்தில் தொடர்ந்து விசாரணை நடக்கிறது.

...

# சட்ட நிருபணசபை பிரேரணை யூ. என். பி. ஆதரிக்கும்

## தமிழரசுக் கட்சியின் நிலை இன்று தெரியும்

சட்ட நிருபண சபை பற்றியும் புதிய அரசியல் அமைப்பு சம்பந்தமாகவும் இலங்கைத் தமிழரசுக்கட்சி எப்படியான நிலையை மேற்கொள்ளவேண்டுமென்பது பற்றி தமிழரசுக் கட்சியின் ஆட்சிமன்றக்குழு இன்று ஆராய்ந்தது. திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் இல்லத்தில் இன்று நடந்த இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள், செனட்டர்கள், திரு. எஸ். எம். இராசமாணிக்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்,

இன்று முற்பகல்வரை அங்கத்தவர்களுக்கிடையில் காரசாரமான விவாதம் நடைபெற்றது. 19-ந் திகதி நவரலங்காவில் நடைபெறவிருக்கும் சட்ட நிருபண சபையின் முதற் கூட்டத்துக்கு தமிழ் அரசுக் கட்சியினர் சென்று கலந்துகொள்ள வேண்டுமென்று முடிவுசெய்யப்பட்டதாகத் தெரிகிறது.

புதிய அரசியலமைப்பில் சமஷ்டி ஆட்சி அமைப்பது சம்பந்தமான திருத்தம் கொண்டு வரப்படவேண்டுமென்றும் புதிய அரசியல் அமைப்பிலும் 29-வது ஷரத்து இணைக்கப்படவேண்டுமென்றும் தீண்டாமை ஒழிப்புச் சம்பந்தமான ஷரத்தும் இணைக்கப்படவேண்டுமென்றும் சிலர் வற்புறுத்தியதாகவும் இது பற்றி காரசாரமான விவாதம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

## இன்று எஸ். ஜே வி.

## 19-ந் திகதி கூட்டத்தில் தமிழரசாரும் கலந்து கொள்வர்

கொழும்பு, வியாழன்

இம்மாதம் 19-ம் திகதி 'நவரலங்கா'வில் நடைபெறும் 'சட்ட நிருபண சபை'யின் முதற் கூட்டத்தில் ஐக்கிய தேயசிக் கட்சி கலந்து கொள்ளும். இக்கூட்டத்தில் சட்டநிருபண சபையாகக் கோரி பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா கொண்டுவரும் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரித்து வாக்களிக்கும். ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிமன்றக் குழு இன்று கூடியபோது இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

மக்களின் அடிப்படை உரிமைகள், சுதந்திரம் பாதுகாக்கவேண்டுமென்று வற்புறுத்துவதென்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிமன்றக் குழு தீர்மானித்தது.

## திருமதி இந்திராகாந்தி அறிவிப்பு

## 'திட்டமிட்டபடி 1972-லேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூடிய தண்டனை

கோட்டை, வியாழன்

சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக் கடத்தல் ஆகிய குற்றங்களுக்கு உள்ளானவர்களுக்கு மிகக் கூடிய தண்டனையை வழங்குவதென மக்கள் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வடபகுதிக்கும், வடமேற்குக் கரைக்கும் விஜயஞ்செய்துவிட்டுத் திரும்பிய பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி கொழும்பில் இதுசம்பந்தமாகக் கூட்டிய மகாநாட்டில் வடக்கில் கள்ளக்கடத்தல் குறைந்துவருவதாகவும், தெற்கில் கூடிவருவதாகவும் தெரிவித்தார்.

## சிலை நிறுவ தீ மானம்

கோட்டை, வியாழன்

இவர் 1966-ம் ஆண்டு ஜனவரி 8-ந் திகதி கொண்டுவரப்பட்ட தமிழ்மொழி (விசேட உபயோக) சட்டத்தை ஆட்சேபித்து ஆர்ப்பாட்டம் செய்தபோது துப்பாக்கிச் சூடுபட்டு இறந்த வண. டான் பரவாரத்ன சாரதேரோவுக்கு அவர் மரணமான இடத்தில் சிலை நிறுவுவதென கலாச்சார நல அமைச்சு [illegible]மானித்துள்ளது.

[illegible]ப்பிக்குவின் நிகழ்ச்சிகள் பற்றிய புத்தகம் ஒன்றை வெளியிட அமைச்சின் ஆலோசனைக் கமிட்டி தீர்மானித்துள்ளது. அத்து

## இன்று வலி மேற்கு கூட்டுறவு விழா

### உதவி அமைச்சர் கலந்து கொள்ளுவார்.

யாழ்ப்பாணம் வெள்

இன்று வலிமேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சமாசம்சர்வதேச கூட்டுறவு தினவிழாவை சமரசத்தலைவர் திரு. வி. இராசசுந்தர தலைமையில் இன்று கொண்டாடுகிறது.

இவ்விழாவில் இங்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் திரு சோமவீரசந்திரசிறி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. விகனகசபை மற்றும் அரசாங் உயர் அதிகாரிகள் கூட்டுறவு ஊழியர்கள் கலந்துரையாற்றுகிறார்கள் காலை நிகழ்ச்சிகளில் பெண்கள் சைக்கிள் ஓட்டமும் ஆண்கள் மரதன் ஓட்டமும் மற்றும் பல விளையாட்டுகளும் இடம்பெறும். மாலையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## சிறிய பீடி உற்பத்தியாளரை ஊக்குவிக்க நடவடிக்கை

கோட்டை, வியா.

சிறிய பீடி உற்பத்தியாளருக்கு ஊக்கப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கைத்தொழில் அமைச்சு பலர் உண்மையான பீடி உற்பத்தியாளர்களல்ல என்று அமைச்சு கண்டுபிடித்துள்ளது.

உண்மையான பீடி உற்

கத்தவர்களுக்கிடையில் கார சாரமான விவாதம் நடை பெற்றது. 19-ந் திகதி நவர லங்காவில் நடைபெறவிருக் வற்புறுத்தியதாகவும் இது பற்றி காரசாரமான விவா தம் நடைபெற்றதாகவும் தெரிகிறது.

## இன்று எஸ். ஜே வி. கூட்டும் மாநாடு

புதிய அரசியலமைப்பை அமைக்க பிரதமர் எடுக் கும் நடவடிக்கை சட்ட விரோதமும் தற்போதைய அரசியல் அமைப்புக்கு மாறுனதுமாகும். ஏனெனில் முழு ஆட்சிமன்றத்துக்கு மட்டுமே புதிய அரசியல் அமைப்பை உருவக்கி செயல்படுத்த அதிகாரம் உண்டு'.

தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இன்று கொழும்பில் கூட்டும் மகாநாடு சம்பந்த

(4-ம் பக்கம் பார்க்க)

திருமதி இந்திரா காந்தி அறிவிப்பு

# 'திட்டமிட்டபடி 1972-லேயே இந்தியபொதுத்தேர்தல்நடக்கும்'

ஸ்ரீநகர், ஜூலை 16 இந்தியாவின் பொதுத் தேர்தல் திட்டமிட்டபடி 1972ம் ஆண்டு நடைபெறு மென இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அறிவித்துள்ளார்.

தமக்குப் போதியளவு பெரும்பான்மை இல்லாத காரணத்தால் தேர்தலைத் திட்டமிட்டதற்கு முன்ன தாக நடாத்திப் பெரும் பான்மையைத் தேடத் தாம் முயல்வதாகக் கூறப் படும் குற்றச்சாட்டை இன்று மறுத்தார்.

ஸ்ரீநகரில் நடந்த கூட்டம் ஒன்றில் பிரதமர் இந்திரா உரையாற்றினர்.

கடந்த ஆண்டு காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளவு பட்டதையடுத்து, இந்திரா வுக்குப் பெரும்பான்மை குறைந்தது. ஆயினும் சோஷலிசக் கட்சிகள் அவ ருக்கு ஆதரவளித்துவரு கின்றன.

கலாச்சார நல அமைச்சு [hole]மானித்துள்ளது.

இப்பிக்குவின் நிகழ்ச்சி கள் பற்றிய புத்தகம் ஒன்றை வெளியிட அமைச் சின் ஆலோசனைக் கமிட்டி தீர்மானித்துள்ளது. அத்து [hole] வருடாவருடம் அவ ரது நினைவாக கொழும் பிலுள்ள உபசான பாவன நிலயத்தில் மகாசங்கத் துக்கு தானம் வழங்கு வதாகவும் தீர்மானித்துள் ளது.

## ஊக்குவிக்க நடவடிக்கை

கோட்டை, வியா. சிறிய பீடி உற்பத்தியா ளருக்கு ஊக்கப்படுத்துவத ற்கான நடவடிக்கைகளை கைத்தொழில் அமைச்சு எடுத்துள்ளது. பீடி இலை இறக்குமதி பற்றியும் கைத் தொழில் அமைச்சர் ஆராய் ந்து வருகிறுர்.

1967-ல் பீடி இலைக்கு மூவாயிரம் சிறிய உற்பத் தியாளர் விண்ணப்பித்திருந் தார்கள். ஆனல் இவர்களில் பலர் உண்மையான பீடி உற்பத்தியாளர்களல்ல என்று அமைச்சு கண்டு பிடி த்துள்ளது.

உண்மையான பீடி உற் பத்தியாளர்கள் பட்டியலை தயாரிக்கும்படி சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கு அமை ச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சர் பல பீடி உற்பத்தியாளர் பிரதிநிதிகளை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தி ஞர்.

மாவிட்டபுரம் விவகாரம்

# எதிர்மனுதார்கள் கோர்ட்டில் மறுமொழி அணைத்தார்கள்!

மாவிட்டபுரம், வெள்ளி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா துரைச்சாமிக் குருக்கள், ஆலய நிர்வாகி திரு. சி. சுந்தரலிங்கம் ஆகியோருக்கு வழங்கப்பட்ட டைக்கால தடை உத்தரவுக்கு நேற்று யாழ்ப்பாண மாவட்ட நீதி பதி ஜனப் ஐ. எம். இஸ்மா யில் முன்னிலையில் இருவரும் மறுமொழி அணைத்தார்கள்.

அட்டோர்ணி ஜெனரல், யாழ்ப்பாண மாவட்ட நீதி மன்றத்தில் தாக்கல்செய்த மனுவைத் தொடர்ந்து ஹரிஜனர்களை ஆதீனகர்த் தாவோ, திரு. சுந்தரலிங் கமோ, அவர்களது ஏஜண்டு களோ மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் உள் வீதிக் குள் செல்வதைத் தடுக் கவோ இடையூறுசெய் யவோகூடாதென்று கடந்த தவணையின்போது இடைக் காலத் தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

நேற்று நீதிமன்றத்தில் திரு. சி. சுந்தரலிங்கமும், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆதீனகர்த்தா துரைச்சாமிக் குருக்களும் ஆஜராளுர்கள். முடிக்குரிய தரப்பில் வழக்கறிஞர் எஸ். கனகரத்தினம் ஆஜராளுர்.

எதிர் மனுதார் சமர்ப் பித்த மறுமொழிக்கு அட் டோர்ணி ஜெனரல் கார ணம் காட்டுவதற்காக விசா ரணை இம்மாதம் 30ந் திக திக்கு ஒத்திவைக்கப்பட்டது

## சுவீப் முடிவுகள்

15-7-70-ல் கொழும்பில் இழுக்கப்பட்ட 307-வது தேசிய சுவீப் முடிவுகள் பின் வருமாறு—

1-வது பரிசு ரூ. 95,990
24 S 0586

2-வது பரிசு ரூ. 38,396
14 X 0311

3-வது பரிசு ரூ. 9,599
13 Y 0281

தலா ரூ.479/90 கொண்ட இதர ஆறுதல் பரிசுகள்—

| | |
|---|---|
| 14 A 0067 | 31 A 0517 |
| 31 A 0825 | 38 B 0838 |
| 04 B 0727 | 36 C 0702 |
| 07 D 0190 | 21 D 0119 |
| 09 D 0776 | 26 E 0115 |
| 09 E 0382 | 40 E 0278 |
| 12 F 0701 | 13 F 0026 |
| 17 F 0441 | 15 F 0532 |
| 10 G 0834 | 22 G 0405 |
| 04 H 0120 | 20 H 0266 |
| 07 H 0061 | 25 J 0931 |

(4-ம் பக்கம் பார்க்க)

## 'ஈத்தோக்கா' கம்பெனி இலங்கையருக்கு ஆபத்து

### உதவி பாதுகாப்பு மந்திரி கூறுகிறுர்

கொழும்பு, வியாழன் 'ஈத்தோக்கா' என்ற பெய ரில் இந்திய வம்சாவழியின ரால் ஆரம்பிக்கப்பட்ட லிமிட்டெட் கம்பனி இலங் கை மக்களுக்கு ஆபத்தான தென்றும் இலங்கை சுதேச மக்களின் உரிமைகள் பாது காக்கப்படுவதற்கு நாங்கள் கவனித்துக்கொள்வோ மென்றும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு. லக்ஸ்மன் ஜெயக்கொடி இன்று பத்திரிகை நிருபர்க ளிடம் தெரிவித்தார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ் தொண்டமான் 1969ம் ஆண்டில் 'ஈத்தோக்கா' என்ற லிமிட்டெட் கம்ப னியை ஆரம்பித்தார். 50 லட்சம் ரூபாய் மூலதனத்து டன் ஆரம்பிக்கப்பட்ட இக் கம்பனி மலையகத் தோட் டத்தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து அவர் களின் நலன்களைப் பாதுகாக் கும் நோக்கத்துடன் உரு வாக்கப்பட்டது.

'ஈத்தோக்கா' செல்வத் தை உறிஞ்சக்கூடிய பலம் பொருந்திய ஸ்தாபனமென் றும் அதன் போக்கில் விட் டால் நாட்டின் பொருளா தாரத்திற்கு ஆபத்தென்றும் திரு. ஜெயக்கொடி கூறினர் (சி. பி ஏ)

### கல்வி கலாச்சாரம் பேணும் இயக்கம்

யாழ்ப்பாணம், வெள்ளி தமிழ்பேசும் இனத்தின் கல்வி, கலை, கலாச்சாரம் ஆகியவை அருகிவிடாவண் ணம் அவற்றைப்பேணி வளர்த்துப் பரப்பும் நோக் குடன் டேவிட் வீதியிலுள்ள கலைக்கூடத்தில் முன்னுள் யாழ். மாநகரசபை மேயர் திரு. சி நாகராஜா உட்பட 15 பேர் நேற்றுக் கூடி ஆலோசனை நடத்தினர். இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. சி. நாகராஜா, மேற்படி இயக்கத்திற்கு ஒரு செயற்குழு அமைத்துச் செயற்படவேண்டுமெனக் கூறிய ஆலோசனை கூட்டத் தில் ஏற்கப்பட்டது.

## யுவதியையும் வாலிபனையும் பொலிஸ் தேடுகிறது

மாவிட்டபுரம், வியாழன் காணமற்போன ஒரு யுவ தியையும் வாலிபனையும் பொலிசார் தேடி வருகின் றனர். கூவிலைச் சேர்ந்த 19 வயதான பிரஸ்தாப யுவதியைக் கண்டுபிடித்துத் தம்மிடம் ஒப்படைக்குமாறு அவரது தாய் காங்கேசன் துறைப் பொலீசில் கேட் டுக்கொண்டுள்ளார். அதே இடத்தைச் சேர்ந்த 23 வய தான வள்ளி கணேசன் என்ற வாலிபரும் தலைமறை வாகியிருப்பதாகப் பொலீ சில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

காணமற்போன இருவ ரையும் தேடுவதில் பொலி சார் ஈடுபட்டுள்ளனர்.

### காந்த சக்தி

மாஸ்கோ, ஜூலை 16 சூரிய மண்டலத்துக்கு அருகாமையில் காந்த சக்தி யுள்ள முகில் கூட்டம் இருப் பதாக சோவியத் யூனியன் கண்டுபிடித்துள்ளது.

—

### வட மாகாண ஆசிரியர் சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி மல்லாகம் இந்துக்கல்லூரி யில் சங்கத்தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமை யில் நடைபெற்ற வட மாகாண ஆசிரியர் சங்கத் தின் 55வது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சங்கத் தின் நடப்பு ஆண்டு உத்தி யோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப் பட்டனர்.

தலைவர்: திரு. கே. மகா லிங்கசிவம், உப தலைவர் கள் திருவாளர்கள் கே. வைரமுத்து, எஸ். பி நட ராசா, ரி. பி முருகையா, பொதுச் செயலாளர்: திரு. எஸ். சபாநடேசன், பொரு ளாளர்: திரு. சி. சிவசம்பு நாதன்.

—

### கேதீஸ்வரத்திற்கு பாதயாத்திரை

யாழ்ப்பாணம், வெள்ளி திருக்கேதீஸ்வரத்தில் இம் மாதம் 20-ம் திகதி நடை பெறும் கதிர்காம தீர்த்த விழாவில் கலந்து கொள்ளு முகமாக திருக்கேதீஸ்வர பாதயாத்திரைக் குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப் பாணத்திலிருந்து புறப்பட் டனர். மாலை 5 மணிக்கு நல்லூர்க் கந்தன் ஆலயத் தில் நடைபெறும் கதிர்கா மத் திருவிழாவைத் தரிசித் துக் கொண்டு யாத்திரிகர் கள் பாதயாத்திரையை ஆரம்பித்தனர். யாழ். பர மேஸ்வரக் கல்லூரி அதிபர் சைவப் பேரறிஞர் திரு. மு. ஞானப்பிரகாசம் தலைமை யில் செல்லும் யாத்திரைக் கோஷ்டி 19-ம் திகதி கேதீச் சரப்பதியிலுள்ள ஞானசம் பந்த மடத்தைச் சென்ற டைந்து தமது 15-வது ஆண்டு சைவ எழுச்சியை நிறைவேற்றும்.

கொழும்பில்

### [..]தி அமைச்சருக்கு இன்று வரவேற்பு

கோட்டை, வெள்ளி இன்றுகொழும்புமாவட்ட நீதிமன்றத்தில் இலங்கை வழக்கறிஞர்களின் பிரதி நிதிகள்கூடி நீதிஅமைச்சர் திரு. ஜே. எம். ஜெயமன் னவை வரவேற்பார்கள். இவ்வரவேற்பில் காணி அமைச்சர் திரு. எச். கொப்பேகடுவ, திரு. பி. பி. ஜி. கலுகல்ல ஆகியோ ரும் கலந்து கொள்கிருர்கள்.

# 'இப்போதாவது பூசை திருவிழாவைநடத்துங்கள்'

## மாவை ஆதீனகர்த்தருக்கு பொலிஸ் அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி இந்தநேரத்திலாவது மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலைத் திறந்து பூஜை, திருவிழாக்களை நடத்துங் கள். எதுவித அசம்பாவித சம்பவங்களும் நேராமல் நாங்கள் பார்த்துக் கொள் கிருேம். கோயில் வாசலில் பொலிசார் எவரும் உத்தி யோக உடையில் நிற்காமல் ஆலயத்துக்கு வரும் இதர அடியார்கள் அணிந்துவரும் உடையில் பொலிசார் தங் கள் கடமையைச் செய்ய வும் நாங்கள் ஏற்பாடு செய் வோம்' என்று வடபகுதிப் பொலிஸ் அதிபர் ஆர். சுந் தரலிங்கம் மாவை ஆதீன கர்த்தா பிரம்மஸ்ரீ சு. துரை சாமிக்குக்களுக்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் கேட்டுள்ளார்.

ஆலயத்தின் இரண்டா வது வீதிக்குச் செல்லும் ஹரிஜனங்களைத் தடுக்கக் கூடாது என்று மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்த உத் தரவை யாரும் மீருமல் பார்த்துக்கொள்வது தான் பொலிசாரின் கடமையாக இருக்குமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### தொழிற் சங்கங்கள் கோரிக்கை

கோட்டை, வியாழன் நீர்வளச் சபையினுல் வருடாவருடம் 3 லட்சம் ரூபா நட்டம் ஏற்படுவதாக வும் இச்சபையைக் கலைத்து விடும்படியும் அரசாங்க இணைக்கழகங்களைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்கள் அர சாங்கத்தைக் கேட்டுள்ளன.

### உதவி அமைச்சர் சந்திரசிறிக்கு உரும்பராயில் நாளை வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி உதவி அமைச்சர் திரு. சோமவீரசந்திரசிறிக்கு போயாதினமான சனியன்று தான் உரும்பராயில் வர வேற்பு அளிக்கப்படும். இன்று ல்ல. வரவேற்பு நிகழ்ச்சி கள் டாக்டர் சிவஞானரத் தினம் தலைமையில் நிகழும் இதனையடுத்து உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோவி லில் விசேஷ பூசைகள் நடை பெறும். உரையரங்கும் நடைபெறும்.



கொடிகாமத்தில் கொலையுண்ட கச்சாய்க் கிராமசபை முன்னுள் உப தலைவர் ஆறுமுகம் கனகரத்தினத்தின் சடலம், சம்பவம் நடந்த இடத்தில் கிடந்தபோது எடுக்கப்பட்ட படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

"அப்பிறென்ரிசெஸ்" 18 வயதிற்குட்பட்ட மோட்டார் உதிரிப்பாக விற்பனைக்கும், மோட்டார் வாகனயந்திரங்கள் பராமரிப்பு, சீர்படுத்தும் வேலைக்கும் தேவை. விண்ணப்பிக்கவும்: ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன் 7179. 3189

கைத்தறியில் வேலை செய்வதற்கு நெசவு வேலை தெரிந்தவர்களும் பயிற்சி பெற விரும்புவோரும் தேவை. காலை 10—12 மணிக்கிடையில் நேரில் வரவும். விக்னேஸ்வரா ரெக்ஸ்ரைல்ஸ், பஸ் நிலையத்திற்கு முன்பாக, யாழ்ப்பாணம். 3191

### தவறிவிட்டது

வெள்ளாந்தெருச்சந்தியில் எட்டுப் பேரடங்கிய கூப்பன் புத்தகங்கள் பிளாஸ்டிக் கவருடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். செ. தம்பிஐயா. 3193

### விற்பனைக்கு

(1) 2 நீர் இறைக்கும் லிஸ்ரர் டீசல் இயந்திரம் பாவிப்பு நிலையில் உள்ளது. 1 1/2 அந்தர் எவரி தராசு ஸ்ரீ வெங்கடேஷ் இரும்பு உற்பத்தி விற்பனை ஸ்தாபனம், பலாலி வீதி, கோண்டாவில். 3194

### வாடகைக்கு

தண்ணீர், மின்சாரம் முதலிய வசதிகளுடன் பகுதி வீடு வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: No 5, றக்கா றோட், யாழ்ப்பாணம். 3195

## சுழிபுரம் கிராமசபை
## கேள்வி விளம்பரம்

சுழிபுரம் கிராமசபைத் தலைவரால் கீழ்க்காணும் அளவுகளையுடைய கற்களை கிராமசபை எல்லைக்குள் தலைவரால் குறிப்பிடப்படும் இடங்களில் பறித்துக் கிப்புக் கட்டுவதற்கு விலைவிபரக் கேள்விகள் கோரப்படுகின்றன.

| பருமன் | தொகை அளவு |
|---|---|
| 3''—4'' உடைத்தவைரக்கற்கள் | 100 கியூப் |
| 2'' உடைத்த வைரக் கற்கள் | 200 '' |
| 3/4 கிறைசர் சல்லி கற்கள் | 25 '' |
| 3/4 சரளைக் கற்கள் அரி. சல்லி | 25 '' |

27-7-70 வரை சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கி. ச. காரியாலயம்,
சுழிபுரம்,
13-7-70. 2370

சு. கந்தசுவாமி,
தலைவர்,
சுழிபுரம் கிராமசபை.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 17—7—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 பக்திப்பாடல்கள், 8-00 குரான், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 ஓடிவிளையாடுபாப்பா.

இரவு 6-00 இசைப்பயிற்சி, 6-25 இடைவேளைஇசை, 6-30 மகளிர் அரங்கம், 7-00 புல்லாங்குழல், 7-15 கோட்டுவாத்தியம், 7-45 திரைகானம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

2வது வாரம்!
ராஜா - யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி நடித்த
மாவீரன் ஜெயசீலன்

## இன்றைய பலன்

ஆடி மாதம் 1-ம் திகதி
[17-7-70]

மேஷம்- உள்ளம் உவகையில் துள்ளும். உறவுமுறையில் இறுக்கமேற்படும். அறவழியில் நாட்டமுண்டு.

ரிஷபம்- கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம்போடுவார்கள்.

மிதுனம்- வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும்.

கடகம்- தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். புதிய நண்பர்கள் சேர்வார்கள்.

சிங்கம்- உறவினர்கள் உதவிக்கு வருவர். வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும் குதூகலமான தினம்.

கன்னி- வசதிகள் பெருகும். மேலிடத்து ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். இனிக்கும் செய்தியொன்று இன்று தாராளமாகக் கிடைக்கும்.

துலாம்- வணிகத்துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் நிவர்த்தியாகும்.

விருட்சிகம்- எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த தன் பின்பே முடிவெடுக்கவும். ஆணவப்போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும்.

தனு- வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை தென்படும். தொழில் சம்பந்தமானவேலைகளில் கவலை அதிகரிக்கும்.

மகரம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரையொன்றுக்குத் திட்டமிடப்படலாம்.

கும்பம்- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான

## வேலணை மத்திய மகாவித்தியாலய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

வேலணை, வியா

வேலணை மத்திய மகாவித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. போட்டியில் இளங்கோ இல்லம் முதலிடத்தையும் வள்ளுவர் இல்லம் இரண்டாமிடத்தையும் பாரதி இல்லம் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன. இல்லப போட்டிகளின் போது ஊர்காவற்றுறை ஆட்சி மன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி இரத்தினம் வெற்றியீட்டியோருக்கு பரிசில்களை வழங்கினார்.

வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு:-

14 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான துரைச்சாமி வெற்றிக்கிண்ணம் செல்வி என். மனோரதி (இளங்கோ இல்லம்)

15 வயதுக்குட்பட்டஆண்களுக்கான திருநீலகண்டன் வெற்றிக்கிண்ணம் செல்வன் கே. நவநேசன் (இளங்கோ இல்லம்)

16 வயதுக்குட்பட்டஆண்களுக்கான கமீஸ் கிளப் வெற்றிக் கிண்ணம்: செல்வன் எஸ். ஆதித்தன், (பாரதி இல்லம்)

16 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கந்தையா வெற்றிக் கிண்ணம் செல்வி எ, சரசா (இளங்கோ இல்லம்)

17வயதுக்குட்பட்டபெண்களுக்கான ஸ்ரீ லங்கா வெற்றிக்கிண்ணம் செல்வி என். மகேஸ்வரி (பாரதி இல்லம்)

19 வயதுக்குட்பட்டஆண்களுக்கான டி ஆர், ஓ. வி. ஏச். வெற்றிக் கிண்ணம் செல்வன் எம். ஜீவா (வள்ளுவர் இல்லம்)

19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கந்தையா வெற்றிககிண்ணம் செல்வி எஸ். இந்திராதேவி (பாரதி இல்லம்)

19 வயதுக்குட்பட்டஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப்போட்டிக்கான நவரத்தினம் வெற்றிக்கிண்ணம் செல்வன் எஸ். சண்முகரத்தினம் (பாரதி இல்லம்)

அலங்கார இல்லத்துக்கான சண்டிஸ் வெற்றிக்கிண்ணம் (இளங்கோ இல்லம்)

பெண்கள் தடை ஓட்டத்திற்கான டி ஆர் ஓ: வி. ஏச். வெற்றிக்கிண்ணம் (இளங்கோ இல்லம்)

ஆண்கள் ... திற்கான ஊர்காவற்றுறை ...

## கொழும்பில் கலை இலக்கிய நண்பர் கழகம்

வெள்ளவத்தை, வியா.

கொழும்பிலுள்ள கலை, இலக்கிய ஆர்வம் கொண்டவர்களை ஒன்றுதிரட்டி கலை இலக்கிய விமர்சனக்கருத்தரங்குகளை நடாத்தவும் ஈழத்துக் கலைஞர்களையும் எழுத்தாளர்களையும் உற்சாகப்படுத்தி அவர்களது படைப்புகளை அவ்வப்போது விமர்சனம் செய்து ஊக்கமளிக்கவும் ஏனைய கலை, இலக்கியத் தொடர்புகளுக்கும் 'கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம்' என்ற ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முதலாவது கூட்டத்தில் பின்வருவோர் நடப்புவருட கழக நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இணைப்புச்செயலாளர் திரு. நெல்லை க. பேரன், பொதுச்செயலாளர்: திரு. அயேசுராசா, நிதிச்செயலாளர்:- குப்பிழான் ஐ. சண்முகம் இன்னும் கட்டுப்பத்தை தொழில் நுட்பக்கல்லூரி இலங்கைப்பல்கலைக்கழகம் இலங்கைசட்டக்கல்லூரி மாணவர்கள் பலரும் அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றும் இலக்கிய நண்பர்கள் பலரும் இக்கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தமிழகத்திலிருந்து ஈழநாட்டிற்கு இறக்குமதியாகும் தரமற்ற இலக்கியச்சஞ்சிகைகளின் தேக்கத்தை உடனடியாகக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் இதற்கானநடவடிக்கைகளை இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நடைமுறைப்படுத்துவது என்றும் பொதுமக்கள் மத்தியில் தரங்கெட்ட சஞ்சிகைகளுக்கு எதிரான 'பொதுஜன அபிப்பிராயத்தை' வளர்ப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## 10 மைல் ஓட்டப்போட்டி

சுழிபுரம், வியாழன்

பண்டத்தரிப்பு திருக்குறள் சனசமூக நிலையத்தினரின் முதலாவது ஆண்டு விழாவும் மரதன் ஓட்டப்போட்டி மற்றும் கலைவிழாவும் அடுத்தமாதம் 9-ம் திகதி நடைபெறவுள்ளன. காலை 25 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியும் 10 மைல் மரதன்ஓட்டப் போட்டியும் நடைபெறும். பிற்பகல் சொற்பொழிவுகள் இரவு கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெறவுள்ளன,

— —

## பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டி

அம்பன், வியா

நாகர்கோயில் நாகேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் இம்மாதம் 18ம்திகதி நாகதம்பிரான் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

— —

## கைதானர்

யாழ்ப்பாணம், வியா.

பல குற்றச்சாட்டுகளின் பேரில் தேடப்பட்டு வந்த ஒருவரைப்பொலிஸார் நேற்றுக் கைதுசெய்தனர். நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட சந்தேகநபரான அ. செல்லத்துரை என்பவரை இம்மாதம் 19-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

யாழ். பொலிஸ் பாரதூரக் குற்றப்பிரிவைச் சேர்ந்த திரு. என். ஈ. இரத்தினம் நாச்சிமார் கோவிலடியில்வைத்து இவரைக் கைதுசெய்தார். (கு. வி. ம.)

## தீவுப்பகுதி ப. நோ. கூ. ச. சமாஜ விழா

வேலணை, வியாழன்

தீவுப்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ 25-வது ஆண்டு நிறைவு வெள்ளிவிழாவும் சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவும் அண்மையில் நடைபெற்றது. அதனையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

மாட்டு வண்டி ஓட்டப் போட்டி ஏ. பிரிவு: செ. துரைசிங்கம் மூளாய்; கு. சங்கரப்பிள்ளை, யிலிட்டி; இ. அப்பாப்பிள்ளை, சுன்னாகம்.

மாட்டு வண்டி ஓட்டப் போட்டி பி பிரிவு: என். நடராசா, உரும்பராய்; தி. அப்பாத்துரை, புளியங்கூடல்; வே. நாகலிங்கம், புளியங்கூடல்.

மரதன் ஓட்டப் போட்டி. எஸ். பிரான்சிஸ் சென் ஜேம்ஸ் ச ச நி; எஸ். ஜேசுதாசன், நாரந்தனை; எஸ். சிவநாதன், மகாமாரி ச ச நி புளியங்கூடல்.

சைக்கிள் ஓட்டப்போட்டி. வி. மகாலிங்கம், காரைநகர்; எஸ். லீனக்கோன், நாரந்தனை; எஸ். செல்வராசா, மகாமாரி ச ச நி புளியங்கூடல்.

பேச்சுப் போட்டி கனிஷ்ட பிரிவு: க. இரத்தினகாந்தி, நாரந்தனை றோமன் கத்தோலிக்க பாடசாலை; சூலபாணி, சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை; வசந்தி, சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலை

விளையாட்டுப் போட்டிகளின்போது திரு. பி. பொன்னுச்சாமி உடற்பயிற்சி ஆசிரியர் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். அவருடன் வேலணை கி. ச. தலைவர் க. சதாசிவம், எம். செல்லையா மற்றும் பலர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## யாழ் நகரில் நாளைய கலைவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நாளை போயாதினத்தன்று யாழ். மாநகராட்சி மன்றம் அளிக்கும் பௌர்ணமி கலைவிழாவில் வடமராட்சி இசைக்கலைப் பாடசாலையைச் சேர்ந்த செல்வி பவானி பாலசுப்பிரமணி இத்தின் நடனமும் குருநகர் யளந்தென்றல் கலாலயத்தின் உயர்ந்த உள்ளம் என்ற சமூக நாடகமும் இடம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். திறந்த வெளியரங்கில் இலவசமாக நடைபெறும் இக்கலை விழாவிற்கு மேயர் திரு. தா. ச. துரைராஜா தலைமைவகிப்பார்.

## நிர்வாகிகள்

புதுக்குடியிருப்பு, வியாழன்

புதுக்குடியிருப்பு மத்திய சனசமூக நிலையத்தின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டார்கள். தலைவர் இ. இரத்தினசிங்கம், உபதலைவர் சி. வீரசிங்கம், செயலாளர் க. திருச்செல்வராசா, உபசெயலாளர் வே. பரமலிங்கம், பொருளாளர் சி. சுப்பிரமணியம் மற்றும் ஏழு நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டார்கள்.

— —

## காமராஜரின் 68வது பிறந்த தினம்

சென்னை, ஜுலை 16

தமிழ்நாடு முன்னாள் முதமைச்சர் திரு. காமராஜரின் 68வது பிறந்த தினவிழா இன்று சென்னையில் கொண்டாடப்பட்டது. சென்னை மாநகரத்தில் இதனை ஒட்டி உணவுவழங்கப்பட்டது, சிறுவர்களுக்கு இனிப்புப்பண்டம், பென்சில், கொபி போன்றவை வழங்கப்பட்டன.

போர்ஹான்ஸ்
புன்னகைப் புதிர்
போட்டி.
ரூபா 17,650-00
பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
# மாவீரன் ஜெயசீலன்

---

இன்று முதல்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் (இருவேடங்களில்)
பத்மினி - ராகினி - தங்கவேலு
நடித்த
# உத்தம புத்திரன்
(புதிய கொப்பி)

---

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்ப்பாணம் திரைகளில்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ வி.எம்.ராஜன்
★ சௌகார்ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும்பலர் நடித்த
'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'
# துணைவன்
கதை வசனம் பாலமுருகன் சங்கீதம் K.V. மகாதேவன்
தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்

---

மகரம்- அறவழியில் நாட்டம் பிறக்கும். புண்ணிய ஸ்தல யாத்திரை யான்றுக்குத் திட்டமிடப்படலாம்.

கும்பம்- ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும். மேலிடத்துச் செல்வாக்கும் பாதிக்கப்படக் கூடும். நிதானம்வேண்டும்.

மீனம்- கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

---

## விளையாட்டுப் போட்டி

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கிறது.

---

**வெஸ்லிசினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
சிவாஜி - சரோஜாதேவி
நடித்த
**ஆலய மணி**

---

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி. ஆர். — சிவாஜி
நடித்த
**கூண்டுக்கிளி**

---

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya, Pre-poya 10.30 a.m.
Glenn Ford,
Carolyn Jones
in
HEAVEN WITH A GUN

---

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p.m
Poya-Prepoya 10-30 a.m
Terry Moore,
Ben Johnson
in
MIGHTY JOE YOUNG
(Color)

---

பெண்கள் தடை ஓட்டத்திற்கான டி ஆர் ஓ: வி. ஏச். வெற்றிக்கிண்ணம் (இளங்கோ இல்லம்)

ஆண்கள் தடை ஓட்டத்திற்கான ஊர்காவற்றுறை ஸ்போட்ஸ் கிளப் வெற்றிக் கிண்ணம் வள்ளுவர் இல்லம்).

கயிறு இழுத்தல் போட்டிக்கான பிரான்சிஸ் வெற்றிக்கிண்ணம் (வள்ளுவர் இல்லம்)

அணிநடைப் போட்டிக்கான தம்பு வெற்றிக் கிண்ணம் வள்ளுவர் இல்லம்.

---

## சாரணர் ஆண்டுவிழா

மட்டுவில், வியா.

தென்மராட்சிப் பகுதி பாடசாலைகளின் சாரணர் ஆண்டு விழா இம்மாதம் 16-ம், 17-ம், 18-ம் திகதிகளில் பிரதி மாலைநேரத்தில் மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சி சாரணர் இயக்கம் செய்து வருகிறது.

மேற்படி சாரணர் ஆண்டு விழாவில் தென்மராட்சி வட்டாரக்கல்வி அதிகாரி திரு வி. கந்தசாமி கலந்து கொண்டு சாரணர்களின் அணிநடை மரியாதையை ஏற்றுக்கொள்ளுவார். அதையடுத்துபாசறைத் தீ ஆரம்ப நிகழ்ச்சியில். முன்னாள் சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் திரு. எம். வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இந்த நிகழ்ச்சியை மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு. ஜே ஜி. அரசரத்தினம் திறந்துவைப்பார்.

---

## காரியாதிகாரியாக நியமனம்


புத்தூர். வியாழன்

இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. சி. பற்குணம் குச்சவெளிப்பிரிவுக் காரியாதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். பொருளியல் சிறப்புப் பட்டதாரியான இவர் முன்பு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் விடுதி மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியவர்.

மட்டுவில் மகாவித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் மந்துவில் திரு. சின்னப்பொடி தம்பதிகளின் புதல்வராவார்.

---

# ரூபா 17,650-00
## பரிசு பெற சந்தர்ப்பம் அளிக்கின்றது.
## ரொக்கமாக 50 ஆறுதல் பரிசுகள்



| | |
|---|---|
| முதலாவது பரிசு | ரூபா 5000-00 |
| இரண்டாவது பரிசு | ரூபா 3000-00 |
| மூன்றாவது பரிசு | ரூபா 2000-00 |

ரூபா 100/- விகிதம் 50 ஆறுதல் பரிசுகள் — ரூபா 5000-00
ரூபா 50/- விகிதம் 53 வியாபாரிகளுக்கான பரிசுகள் — ரூபா 2650-00

மேலே 4 அழகிய போர்ஹான்ஸ் பாவனையாளர்கள் அங்குமிங்குமாக காணப்படுகிறார்கள். நீங்கள் செய்யவேண்டியது இதுதான். கீழேயுள்ள போர்ஹான்ஸ் பாவனையாளர்களின் அழகிய புன்னகையை வெட்டி எடுத்து சரியான முகத்துடன் சேர்த்து முழுப் படமாக்குங்கள்.

முழுமையாக்கப்பட்ட படங்களை ஒரு மொத்தமான கடுதாசியிலோ அல்லது மட்டையிலோ ஒட்டி உங்கள் பெயர் விலாசம் ஆகியவற்றை பிரவேசப் பத்திரத்தில் தெளிவாக எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்: உங்கள் வாடிக்கைக் கடைக்காரரின் பெயரையும் விலாசத்தையும் குறிப்பிடத் தவறாதீர்கள். ஏனெனில் உங்கள் வியாபாரிக்கும் 50/- பரிசு உண்டு. நீங்கள் அனுப்பும் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகள் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

நீங்கள் எத்தனை பிரவேசப் பத்திரங்களையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு பிரவேசப் பத்திரத்துடனும் ஒரு பெரிய அல்லது மத்திம சைஸ் போர்ஹான்ஸ் பற்பசை வெத்துப் பெட்டி அல்லது இரண்டு சிறிய சைஸ் வெத்துப் பெட்டிகளை சேர்த்து அனுப்புதல் வேண்டும்.

வெத்துப் பெட்டியுடன் கூடிய பிரவேசப்பத்திரங்களை "போர்ஹான்ஸ் புன்னகைப் புதிர் போட்டி, மே/பா. மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், த. பெ. இல. 319, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பிவையுங்கள்.

இப்போட்டியில் மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட், ஷெனித் அட்வெடைசிங் ஆகிய ஸ்தாபனங்களின் ஊழியர்களைத்தவிர, இலங்கையில் வசிக்கும் எவரும் கலந்து கொள்ளலாம்.

மத்தியஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது. இதைப்பற்றி எவ்வித கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்ளப்படமாட்டாது.

இப்போட்டி 1970-ம் ஆண்டு செப்டம்பர் 30-ம் திகதி முடிவடையும்.

பிரவேசப் பத்திரம்
பெயர்: ......................
விலாசம்: ......................
......................
வியாபாரியின்
பெயர்: ......................
விலாசம்: ......................
......................




ZENITH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனில் 50,000 துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

## கொடிகாமத்தில் நிரந்தர பொலிஸ் நிலையம் வேண்டுமாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொடிகாமத்தில் நிரந்தர பொலிஸ் நிலையம் ஒன்று அமைக்கவேண்டுமென கொடிகாமப் தமிழரசுக்கட்சிவாலிபமுன்னணிக் கிளை சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினத்திற்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் கோரியுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இப்பகுதியிலுள்ள இருபாடசாலைகளையும் இணைத்து தரமுயர்த்தவேண்டும். இப்பகுதிக்கு மின்சாரவசதி செய்துதரவேண்டும்.

வெள்ளம் தேங்கி நிற்பதைத் தடுப்பதற்கு ஒரு வடிகால் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். கைத்தொழில் நிலையமொன்று அமைத்து இப்பகுதி வாலிபர்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

தற்போதுள்ள சந்தையை ஒரு நவீன சந்தையாக மாற்றவேண்டும். அரசினர் ஆஸ்பத்திரியைவிஸ்தரிக்க வேண்டும். காணியற்ற மக்களுக்கு காணி பெற்றுக் கொடுக்கவேண்டும்.

## 'உண்மை விவசாயிகளுக்கு காணி வழங்க வேண்டும்'

பருத்தித்துறை, வியா

தேவிபுரம் மத்தியவகுப்பு தென்னை உற்பத்தியாளர் சங்க வருடாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

"திருத்தப்படாத காணிகளை உடனடியாக ரத்துச் செய்து உண்மையான விவசாயிகளுக்கு வழங்கவேண்டும்.

தேவிபுரம் பகுதியில் நடைபெறவிருக்கும் சீர்திருத்த வேலைகளிலும் அப்பகுதியிலுள்ள வேலையற்றோரின் சேவையைப் பயன்படுத்த வேண்டும்.

தேவிபுரம், தெங்கு உற்பத்திப் பொருட்களை பிற இடங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கான நவீன போக்குவரத்து வசதிகளை அரசாங்கம் செய்துதரல் வேண்டும்.

தேவிபுரம், சுதந்தி புரம் உடையார் கட்டு ஆகியபகுதிகளுக்கு ஒரு கிராமசேவையாளர் நியமிக்கப்படுவதுடன் பொலிஸ் ரோந்து சுற்றுவதற்கும் வசதிகள் செய்யப்படல் வேண்டும். முல்லைத்தீவு - கிளிநொச்சி பஸ்சேவை ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

வவனியாப் பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்லத்தம்புவுக்குப் பொது வரவேற்பு அளிக்கப்படல்வேண்டும். முக்கிய இடங்களில் தபால்பெட்டிவைப்பதுடன் தபால் பட்டுவாடா செய்யவும் ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும்."

## சைக்கிள் திருடர்கள் பற்றி எச்சரிக்கை

மட்டுவில், வியா.

"சைக்கிள்சொந்தக்காரர்கள்அஜாக்கிரதையாக இருப்பதின் காரணமாகவே இப்பகுதியில் சைக்கிள் திருடர்கள் அதிகரித்து வருகிறார்கள் எனவே உங்கள சையிக்கிள்வாகனங்களை ஜாக்கிரதையாக வைப்பதைத் தொடர்ந்து இப்பகுதியில் சையிக்கிள் திருடர்களை அறவே ஒழிக்க உதவவேண்டும்"

இவ்வாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி திரு என். கதிர்காம

தென்மராட்சிப்பகுதியில், சையிக்கில் திருடர்கள அதிகரித்து வருகிறார்கள இதற்குக்காரணம் சையிக்கில் சொந்தக்காரர்கள தமது சையிக்கில் வாகனங்களை அஜாக்கிரதையாக பூட்டாமல் பந்தோபஸ்தில்லாமல் கண்ட இடங்களிலும் அனுதையாக விடுவதுதான் எனவே தான்இப்பகுதி பொதுமக்கள் தமது சையிக்கில் வாகனங்களை பூட்டிபந்தோபஸ்துடன்வைப்பதைத் தொடர்ந்து சைக்கிள் திருடரை ஒழிப்பதுடன்,

# வேலை நிறுத்தம்

## அவசர கால நிலை பிரகடனம் பற்றி மந்திரி சபை ஆலோசனை

லண்டன், ஜூலை 16

பிரிட்டனில் துறைமுகத் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஆரம்பித்துள்ளனர். 44 வருடங்களுக்குப்பின் நடைபெறும் துறைமுகத் தொழிலாளரின் பெரும் வேலைநிறுத்தம் இதுவாகும். சுமார் 50 000தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்கின்றனர். சம்பள உயர்வுகோரி இவர்கள் வேலைநிறுத்தம் செய்கின்றனர் வேலைநிறுத்தத்தைத் தவிர்ப்பதற்குக் கடைசிநேரத்தில் எடுக்கப்பட்ட முயற்சி பயனளிக்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சம்மதம் தெரிவித்திருந்தனர். ஆயினும் தொழிலாளர் வேலைக்குச் சென்றால் தான் பேச்சுவார்த்தை நடத்த முடியுமென முதலாளிமார் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த முயற்சி தோல்வியடைந்தது.

துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தம் காரணமாக பிரிட்டனின் ஏற்றுமதி இறக்குமதி முக்கால்வாசியும் பாதிக்கப்படுமென அஞ்சப்படுகிறது. 40 நாட்களுக்குத் தேவையான இரும்புக்கனிஜமே கைவசமிருப்பதால் வேலைநிறுத்தம் நீடித்தால் பிரிட்டனின் தொழில் வெகுவாகப் பாதிக்குமென்று உருக்குக்கூட்டுத் தாபனம் தெரிவித்தது

துறைமுகத் தொழிலாளரின் வேலைநிறுத்தத்தினால் தினமும் 42 கோடி ரூபாய் நஷ்டமேற்படுமென்று ஓர் அரசாங்க அதிகாரி கூறினார்

வேலைநிறுத்தம் நீடிக்குமானால் உணவுப்பொருள் உட்பட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாமல் ஏற்றுமதி றக்குமதி வேலைகளில் இராணுவத்தை ஈடுபடுத்துவதுபற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஆலோசனைசெய்துவருகிறது அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்திற்குப் பங்கீட்டு முறையைக் கொண்டுவருவது பற்றியும் அவசர கால நிலையைப் பிரகடனப்படுத்துவதுபற்றியும் பிரிட்டிஷ்மந்திரிசபை ஆலோசனை செய்துவருகிறது.

# மேற்காசிய நெருக்கடிக்கு அரசியல் தீர்வே வழி

## எகிப்து - சோவியத்தலைவர்கள் கருத்து

மாஸ்கோ, ஜூலை 16

மேற்காசியப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்பதை ஐக்கிய அரபுக்குடியரசு அதிபர் நாஸரும் சோவியத் தலைவர்களும் இணங்கியுள்ளனர். 1967-ம் ஆண்டின் ஐ. நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசியல் தீர்வுகாண்பதற்கு தொடர்ந்து வலியுறுத்துவதென அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

இதேசமயம் நியுயோர்க்கிலுள்ள அமெரிக்க. சோவியத்யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் ஐ நா. பிரதிநிதிகளும் நேற்று மீண்டும் சந்தித்து மேற்காசியா சம்பந்தமாக அரசியல் தீர்வு காண்பதற்காக

மேற்காசியப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வுகாணக் கூடியமுறையில் அமெரிக்கா கடைசியாகத் தெரிவித்ததிட்டத்துக்கு ஐக்கிய அரபுக்குடியரசு அதிபரிடமிருந்தும் சோவியத் பிரதமரிடமிருந்தும் அமெரிக்கா இன்னமும் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சசர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் தெரிவித்தார்.

## சூயஸ்பகுதியில் இஸ்ரேலியர் கடும் தாக்குதல்

சூயஸ்கால்வாயின் தெற்குக் கரைப்பகுதியிலும் நடுப்பகுதியிலும் இஸ்ரேலிய போர்விமானங்கள் நேற்றுக் கடும் தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதலின் பின் விமானங்கள் யாவும் திரும்பிவந்து சேர்ந்[illegible]கவும் இஸ்ரே[illegible] தெரிவித்தனர். சூயஸ்பகுதியிலுள்ள ஐக்கிய அரபுக்கள் தெரிவித்தனர். சூயஸ் பகுதியில் எகிப்திய நிலைகள் மீது இஸ்ரேலியர் தொடர்ந்து நடத்திவரும் விமானத் தாக்குதலில் இது [illegible] என்பத்தெட்டாவதாகு[illegible]

இஸ்ரேலியரின் தாக்குதலால் சேதம் ஏற்படவில்லை [illegible] எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜோர்டான் [illegible]லேயிலும்

## தென்னாபிரிக்க ஆயுத விநியோகம்

### பாதுகாப்புச்சபை இன்று கூடும்

நியுயோர்க், ஜூலை. 16

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விநியோகிக்கவோ, விற்பனை செய்யவோ கூடாது என்று ஐ நா. முன்னர் செய்ததீர்மானத்தை மீறி தென்னாபிரிக்காவுக்கு ஆயுதங்கள் விற்பதற்கு பிரிட்டன் முன்வந்திருப்பது குறித்து ஐ நா. பாதுகாப்புச் சபை கூடி ஆராயவேண்டுமென ஐ நா. வில் அங்கம் வகிக்கும் நாற்பது நாடுகள் பாதுகாப்புச் சபைத் தலைவரைக் கேட்டிருக்கின்றன. இக் கோரிக்கையை விடுத்த நாடுகள் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளேயாகும்

பாதுகாப்புச் சபை நாளை கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## பிரிட்டிஷ் இளவரசர்

### அமெரிக்கா விஜயம்

வாஷிங்டன், ஜூலை. 16

பிரிட்டனில் முடிக்குரிய வாரிசான இளவரசர் சார்ஸும் அவரது சகோதரி ஆன்இளவரசியும் வெள்ளிக்கிழமை வாஷிங்டனுக்கு விஜயம் செய்கின்றனர். அவர்களுக்கு வரவேற்பளிப்பதிலும் அவர்களை உபசரிப்பதிலும் வெள்ளை மாளிகை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## கருணாநிதி

லண்டன், ஜூலை 16

வெளிநாடுகளில் சுற்றுப் பயணம் செய்வதற்காக கடந்த 1ந் திகதி சென்னையிலிருந்து புறப்பட்ட முதலமைச்சர் திரு மு கருணாநிதி இத்தாலி, பிரான்சு, சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில்சுற்றுப் பயணம் செய்துவிட்டு இப்போது லண்டன் போய்ச் சேர்ந்துள்ளார்.

இவர் இங்கு ஒருவார காலம் தங்கி முக்கிய இடங்களையும், தொழிற்சாலைகளையும் பார்வையிட்டபின் தமது பிரயாணத்தை முடித்துக் கொண்டு இம் மாதம் 21ந் திகதி சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹியூம்பிரபுவையும் சந்தித்துப் பேசுவார்.

## 'வடக்கில் தேசிய ஐக்கியம் வளர இரு சின்னங்கள்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடக்கில் நாகதீபமும், தெற்கில் கதிர்காமமும் ஆத்மீக தத்துவத்தையும் தேசிய ஐக்கியத்தையும் இணைக்கும் இரு சின்னங்களாக மிளிர்கின்றன."

நயினாதீவு பிரயாணிகள் சபையின் பொதுக்கூட்டத்துக்குத் தலைமை வகித்த திரு. ஆர். ஆர். பூபாலசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"வகுப்புவாத சக்திகளை முறியடித்து வறியமக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய திட்டங்கள் முக்கூட்டு முன்னணி ஆட்சியில் உள்ளன. இவ்வேளையில் எமது பின்தங்கிய தீவுப்பகுதி பிரதேசங்களில் வாய்ப்புவசதி அற்று வாழும் படித்தவர்கள், வாலிபர்கள், கடல் தொழிலாளர், பணம் பொருள் உற்பத்திசெய்வோர், சிறுகைத்தொழில் செய்வோர் மற்றும் தொழிலாளர்கள், சாதாரண பொதுமக்கள் யாபேரும் தகுதியான வாய்ப்பு வசதிகள் பெற்றுவாழவும், இன, மத, மொழி, வாதப்பிரச்னைகளுக்குச் சரியான தீர்வு காணவும் நாம் ஓர் ஐக்கிய சோஷலிஸ குடிஅரசு இலங்கையை உருவாக்க அணிதிரளவேண்டும்.

நெடுந்தீவு, நயினாதீவு அனலைதீவு, எழுவைதீவு கடல் பிரயாணச்சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்துவது சுண்திறந்தது போலாகும்.

இவ்வாண்டு அம்பாள் உற்சவ காலத்தில் ஆயிரக்கணக்கான இந்து பௌத்த யாத்திரிகர்களை நெடுங் கியூவில் கொடும் வெயிலில் தண்ணீரும் இல்லாது வைத்துப் புண்படுத்தியது வருத்தத்திற்குரியது.

ஆகவே எமது கடல்பிரயாண சேவையை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்த வேண்டும்

திரு' ஐ. நடராசா பேசியபோது "தென்னிலங்கையில் வகுப்புவாத அரக்கன் தவிடுபொடியாகிவிட்டான். ஆனால் வடக்கே அவ்வரக்கன் தார்பூசுவதும், தாழ்த்தப்பட்ட மாணவர்களைப் பாடசாலைகளில் பாரபட்சம் காட்டுவதும் பாடசாலையை எரிப்பதும் ஆனதீய செயல்கள் செய்கிறான் இது நமக்கு மிகவும் வெட்கக்கேடானசம்பவம்" என்று கூறினார்.

## விவசாயிகளுக்கு பென்ஷன் திட்டம்

குருநாகல், வியா.

விவசாயிகளுக்குப் பென்ஷன் கிடைக்கக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனது 5 வருட பதவிக்காலத்தில் வாக்குறுதிகளை நிறைவேற்றும்

அகில இலங்கை பல்கலைக் கழக பட்டதாரி சங்கத்தினால் குருநாகலையில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டமொன்றில் பேசுகையில் சமூக சேவைகள் அமைச்சர் திரு. டி பி தென்னக்கோன் மேற்கண்டவாறுகூறினார்-

பௌத்த லோக பிரிவின் அதிபர் வண. பண்டித அங்கிராசநாயக்க தேரோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

விவசாயிகளுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம், வயது சென்ற காலத்தில்

2 கொத்து அரிசி வழங்குவோம். அரசாங்கஊழியர்களுக்கு விரைவில் அரசியல் உரிமை வழங்கப்படும்.

## கட்டணத்தை குறைக்க முறையீடு

புதுக்குடியிருப்பு, வியா

முல்லைத்தீவுக்கும் புதுக்குடியிருப்புக்கும் இடையிலான பஸ்சேவை கட்டணம் அதிகமென்று இ போ. ச அதிகாரிகளிடம் பிரயாணிகள் முறையிட்டுள்ளனர்.

பத்துமைல் இடைத்தூரத்தைக்கொண்ட வேறு பகுதிகளில் பஸ் கட்டணமாக ஐம்பது சதம் மட்டுமே அறவிடப்படுகிறதென்றும், முல்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

...தைத் தொடர்ந்து இப்பகுதியில் சையிக்கிள் திருடர்களை அறவே ஒழிக்க உதவ வேண்டும்''

இவ்வாறு சாவகச்சேரி பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி திரு என். கதிர்காமநாதன் சையிக்கிள் பாவிப்பு சொந்தக்காரர்களுக்கு பகிரங்க கோரிக்கையை விடுத்துள்ளார். பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கதிர்காமநாதன் தொடர்ந்தும் தனது வேண்டுகோளில் குறிப்பிட்டுளளதாவது:-

...லும் அனுதையாக விடுவதுதான் எனவேதான்இப்பகுதி பொதுமக்கள் தமது சையிக்கில் வாகனங்களை பூட்டிபந்தோபஸ்துடன்வைப்பதைத் தொடர்ந்து சைக்கிள் திருடரை ஒழிப்பதுடன், தென்மராட்சியின் நல்ல பெயரையும் காப்பாற்றுங்கள்.

## கட்டாக்காலிகள் தொல்லை

வேலணை, வியாழன்

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஏற்படும் வெள்ளஅழிவு சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை மற்றும் இப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் சேதங்கள்பற்றி ஆராய்ந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இக் குறைகளைத் தவிற்கும் பொருட்டு மேலதிக அரசாங்க அதிபர் திரு ஜே.எம்.சபாரத்தினம் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போது தீவுப்பகுதி எம். பி, கிராம சேவையாளர், காரியாதிகாரி, கமத்தொழிலபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள் கிராமசபைத் தலைவர்கள் ஆகியோரும்பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## பாதுகாப்புநிதிக்கு இவர்கள் ரூ.1000

உடுப்பிட்டி, வியா.

அகில இலங்கைத் தமிழ்க் கூட்டுறவுப் பரிசோதகர் சங்கம் நாடுகாக்கும் நிதிக்குச் சங்க உறுப்பினர்களிடமிருந்து ரூபா 1000 திரட்டியுள்ளது. இந்நிதியை அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினுவிடம் சங்கத் தூதுகோஷ்டி நேரில் கையளிக்குமென்றும் பொதுச் செயலாளர் திரு. மு. ஜெயராஜசிங்கம் தெரிவித்தார்.

## சுற்று நிருபம்

முல்லைத்தீவு, வியா

இம்மாதம் 27-ம் திகதிக்கு முன் பொதுமக்களுக்கு 25-வது தொடர்ச்சிக்கான கூப்பன் புத்தகங்களை வழங்கி முடிக்கவேண்டும் என சகல கிராமசேவையாளர்கட்கும் வவுனியா உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி தனது சுற்று நிருபத்தில் வேண்டியுள்ளார்.

## கூட்டுறவு பரிசோதகர் சங்க அமைச்சரை சந்திக்கும்

உடுப்பிட்டி, புதன்

அகில இலங்கைத் தமிழ்க் கூட்டுறவுப் பரிசோதகர் சங்கம் அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினுவைநேரில் சந்தித்துத் தமிழ்க்கூட்டுறவு பரிசோதகர்களின் குறைபாடுகளை எடுத்துரைக்க இருக்கின்றது

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் அமைச்சர் திரு. இலங்கரத்தினுவைப் பேட்டி காணும் தமிழ்க்கூட்டுறவுப் பரிசோதகர் சங்கத்தூதுக் குழு தமிழ்க்கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு எட்டாம் வகுப்புச் சிங்களத்தேர்ச்சி கட்டாயம் என்ற விதியை விலக்கி 5-ம் தரச் சிங்களத் தேர்ச்சி போதுமானது என்று புதிய சட்டம் கொண்டுவந்து பிரகடனப் படுத்துமாறு கேட்டுக்கொள்ளும்.

8-ம் தரச் சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை மிகவும் கடினமானது என்றும் சிங்கள ஜீ. சீ. ஈ. (சாதாரண) தரத்தைவிடக் கூடியதரத்தைக் கொண்டு உள்ளதாகவும், இதனுல் தமிழ் ஊழியர்கள் இத்தேர்ச்சிப் பரீட்சையில் சித்திபெறுவது இல்லையென்றும் இக்கோஷ்டியினர் அமைச்சரிடம் எடுத்துக் கூறுவர்.

...பத்யூனியன், பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நான்கு வல்லரசுகளின் ஐ நா. பிரதிநிதிகளும் நேற்று மீண்டும் சந்தித்து மேற்காசியா சம்பந்தமாக அரசியல் தீர்வு காண்பதற்காக தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைகள் மூலம் தான் மேற்காசியாப் பிரச்னைக்கு நிரந்தரமான அமைதித் தீர்வு காணமுடியுமென்று இஸ்ரேல் வெளிவ்வகார மந்திரி திரு. எபா இபான்மீண்டும் ஜெருஸலத்தில் வலியுறுத்திக் கூறினுர்.

## 200 புதிய லொறிகளுக்கு அனுமதி

கோட்டை, வியா.

இருநூறு லொறிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார் போக்குவரத்து அமைச்சர் திரு லெஸ்லி குணவர்த்தனு. புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதும் இறக்குமதி செய்யப்பட்ட லொறிகளை கொடுக்க அனுமதி வழங்கவேண்டாமென அமைச்சர் உத்தர விட்டிருந்தார் பத்துக் கம்பெனிகள் இந்த லொறிகளை இறக்குமதி செய்திருந்தன. கடந்த அரசாங்கம் இதற்கான அனுமதியை வழங்கியிருந்தது

ஐயாயிரம்பேர் லொறிகளுக்கு விண்ணப்பித்துள்ளனர். விண்ணப்ப ஒழுங்கின்படி லொறிகளை கொடுக்கும்படி கமிஷனர் அறிவித்துள்ளார்.

...டும் தாக்குதல் நடத்தியதாகவும் தாக்குதலின் பின் விமானங்கள் யாவும் திரும்பிவந்து சேர்ந்து விட்டதாகவும் இஸ்ரேலியர் தெரிவித்தனர். சூயஸ்பகுதியிலுள்ள ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவநிலைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகவும் அது வெற்றியளித்துள்ள இஸ்ரேல் அதிகாரி...

...தாக்குதலில் இது என்பத்தெட்டாவதாகும்.

இஸ்ரேலியரின் தாக்குதலால் சேதம் ஏற்படவில்லையென்று எகிப்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஜோர்டான் எல்லையிலும் இராணுவ நிலைகள் மீதும் கொரில்லா நிலைகள் மீதும் இஸ்ரேலிய போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலியர் தெரிவித்தனர்.

## 'சீனு இல்லாமல் இந்து சீன பிரச்னைக்கு தீர்வில்லை'

சைகோன், ஜூலை 16

தாய்லாந்து, தென்வியட்நாம், கம்போடியா ஆகிய நாடுகள் கொண்ட புதிய இராணுவக் கூட்டமைப்பு ஒன்று இந்து சீனத்தில் உருவாகலாமென்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது. இந்தக் கூட்டமைப்பில் தேசிய சீனுவும் சேரக்கூடுமென்றும் லாவோஸ் இதில் சேருவது நிச்சயமில்லையென்றும் செய்திகள் தெரிவித்தன.

சமீபத்தில் தென்வியட்னும் உப அதிபர், தாய்லாந்துக்குச் சென்று தாய்லாந்து அரசு தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தித் திரும்பியிருந்தார்.

### சீனு இல்லாமலா?

பாரிசுக்குச் சென்றிருந்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹியூம்பிரபு பிரஞ்சு வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு வார்த்தை நடத்தியபின் நேற்று லண்டன் திரும்பினுர்

பாரிஸில் மேற்காசியப் பிரச்னை, கிழக்கு மேற்கு உறவு, இந்துசீனப் பிரச்னை பற்றி இருவரும் பேசினுர்களாம். இந்துசீனத்தில் அமைதியை ஏற்படுத்துவதற்கான எந்த முயற்சியிலும் பேச்சுவார்த்தைகளிலும் நவசீனம் கலந்து கொள்ளாவிடில் அதனுல் பயன் ஏற்படாது என பிரஞ்சு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தாராம்.

சீனத் தூதுக்குழுவொன்று விரைவில் பிரான்சுக்கு விஜயம் செய்யுமென்றும் பிரஞ்சு அமைச்சர் தகவல் தெரிவித்தார்.

## 'குடும்பக் கட்டுப்பாடே சிறந்தது'

கோட்டை, வியாழன்

கருவில் உண்டானஉயிரை அழிப்பது மதவுணர்வுகளின் படியும் சட்ட சம்பிரதாயங்களின் படியும் பாவமாகும் என்றும் இலங்கைக் குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டச் சங்கம் புத்திமதி வழங்கியுள்ளது.

குடும்பத் திட்டத்தைக் கடைப்பிடித்து குழந்தைகள் மேலும் உண்டாகாமல் தடுப்பதுதான் புத்திசாலித்தனமானதும் நன்மையானதுமாகும் என்று அதுபலருக்கு விளக்கியுள்ளது.

தற்போது குடும்பத்திட்டத்தைக்கடைப்பிடிப்போர் தொகை பெருகிவருகிறதென்றும் இலங்கைக் குடும்பத்திட்ட தகவல் பகுதி தெரிவிக்கின்றது.

## 'வெங்காயத் தடையை நீக்காதீர்'

யாழ்ப்பாணம்,வெள்ளி

ஆனையிறவில் வெங்காயத்தடையை அகற்றுவதனுல் வெங்காய உற்பத்திக்கு வீழ்ச்சியும் சீரான விநியோகத்திற்குத் தடங்கலும் ஏற்படுமென வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவு சமாசம் அச்சம் தெரிவித்துள்ளது.

விவசாயியின் உற்பத்தி விருத்திக்கும் பொதுமக்களின் தேவைக்கும் அரசு பொறுப்புள்ளதாகையால் தடை இருக்க வேண்டும்என்பதை மேற்படி சமாசம் வற்புறுத்தியுள்ளது.

சமாசம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் வியாபாரிகளின் தூண்டுதல் காரணமாக ஆட்சிமன்ற உறுப்பினர்ஒருவர் இதுபற்றி ஆட்சிமன்றத்தில் குரல்எழுத்ததுபற்றியும்கூறப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்கள் எழுதவும் கருத்தரங் கொன்றைக் கூட்டவும் சமாசம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

...துக் கொண்டு இம் மாதம் 21ந் திகதி சென்னை திரும்புவார் என எதிர்பார்க்கப்படுகிறது. லண்டனில் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஹியூம் பிரபுவையும் சந்தித்துப் பேசுவார்.

## கம்போடியா வெற்றியாம்

வாஷிங்டன், ஜூலை.16

கம்போடியா சம்பந்தமாக எடுக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைகள் கணிசமான அளவு வெற்றியீட்டிக் கொடுத்திருப்பதாகவும் பேச்சுவார்த்தைகளுக்கு கம்யூனிஸ்ற்கள் இணங்குவதற்கு இது வழிவகுத்திருப்பதாகவும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோஜர்ஸ் தெரிவித்திருக்கிருர்.

...கரசநாயக்க தேரோ தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

விவசாயிகளுக்குப் பென்ஷன் வழங்கும் திட்டம், வயது சென்ற காலத்தில் அவர்கள் கஷ்டமின்றி வாழ வழிவகுக்கும். இந்நாட்டில் ஒரு சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க முயற்சி எடுத்துவருகின்ருேம் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா இப்படியான சமுதாயத்தை அமைக்க அயராது உழைத்தார். ஆனுல் அதன் பலா பலன்களை காணமுடியாமல் முதலாளி வர்க்கத்தினர் 65-ம் ஆண்டுத் தேர்தலில் தடுத்து விட்டனர்

சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டது போல் செப்டம்பர் 26-ம் திகதி

...அதிகாரிகளிடம் பிரயாணிகள் முறையிட்டுள்ளனர்.

பத்துமைல் இடைத்தூரத்தைக்கொண்ட வேறு பகுதிகளில் பஸ் கட்டணமாக ஐம்பது சதம் மட்டுமே அறவிடப்படுகிறதென்றும், முல்லைத்தீவு புதுககுடியிருப்பு ஆகிய இடங்களுக்கான பஸ் கட்டணமாக 75 சதம் அறவிடப்படுகிறதென்றும்முறையீட்டில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதுபற்றி எந்த முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் பெரியபுலோ—நெல்லியான் திருவடிநிலை பகிரங்க வீதி நீண்டகாலத்துக்குப்பின்னர் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

## பாடசாலைகளில் கைப்பணி பாடத்துக்கு ஐ. நா. உதவி

பருத்தித்துறை, வியா.

சிறு கைப்பணிகளைக் கற்பித்தற்கேற்ற மூலப்பொருட்களைக் கல்வித் திணைக்களம் பாடசாலைகளுக்கு அனுப்பவிருக்கிறது. கடதாசி, காட்போட், தட்டுப் பலகை மரத்துண்டு.வேர்ப் பலகை போன்ற இலகுவாகக் கிடைக்கக்கூடிய பொருட்களை உபயோகித்து மிக உபயோகமான பொருட்களை உற்பத்தி செய்வதே கல்விப் பகுதியின் நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் சபையும் இதற்கு உதவுகிறது.

ஆசிரிய கலாசாலைகள் உட்பட அறுபது பாடசாலைகளுக்கு இப்பொருட்கள் அனுப்பப்படவிருக்கிறது.

'செராமிக்'கைப் பாடமாகக்கொண்ட பாடசாலைகளுக்குப் பிலியந்தலை பீங்கான் தொழிற்சாலையிலிருந்து வெண் சீனக்களிமா கொடுக்கப்படவிருக்கிறது.

ஐ. நா. உதவியுடன் கிடைத்த பல மின்சூளைகள் பழுதடைந்த நிலையிலிருப்பதால் அவைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பமுடியவில்லையென்று தெரிகிறது

இவ்வித ஆரம்ப முயற்சிகள் தொழிற்கல்வி பரந்த ரீதியில் எதிர்காலத்திற் கற்பிக்கப்படுவதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கலாம் எனக் கல்விப்பகுதி உயரதிகாரி ஒருவர் கருதுகிருர்.




குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன

நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டஹோரன்

சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஜீவாத்மவும், பரமாத்மாவும் கடிகாரத்தின் இரண்டு முட்களைப் போன்றவை. ஜிவாத்மாவும் பரமாத்மாவும் தனித்தனியே இருந்தாலும் சுடிகாரத்தின் இரண்டு முட்களும் அப்போதப்போது ஒன்றையொன்று சந்திப்பது போல் தகுந்த சந்தர்ப்பங்களில் இவையும் ஒன்று சேருகின்றன. —ராமகிருஷ்ணபரமஹம்ஸர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆடி மாதம் 1-ந் திகதி (17 - 7 - 70)


## மாணவர் உடல் நிலை

பல்கலைக்கழக மாணவர்களின் ஆரோக்கியம் மிக மோசமான நிலையில் இருப்பதாக பேராதனைப் பல்கலைக் கழக வைத்திய அதிகாரி டாக்டர் எச். பி. ஏ விஜயதுங்கா தெரிவித்திருக்கிறார். பல்கலைக்கழக மாணவர்கள் பலருக்கும் பலவிதமான நோய்கள் இருப்பதாக டாக்டர் விஜயதுங்கா தெரிவித்திருப்பதுடன் பட்டதாரி மாணவர்களின் ஆரோக்கியம் மேலும் மோசமடையாமல் தடுப்பதற்கு உடனடியாக தகுந்த வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பாடசாலைப் பிள்ளைகள் ஆரோக்கியதேசிய சபையையும் கேட்டுள்ளார்.

பட்டதாரி மாணவர்களின் ஆரோக்கியம் கெடுவதற்கு காரணம் என்ன என்பதை ஆராய்ந்து தகுந்த சிகிச்சையளிக்கவும் அவர்களின் ஆரோக்கியத்தைப் பேணவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென்பதும் அவர்களின் ஆரோக்கியம் கெடுவதற்கும் அவர்கள் நோய்வாய்ப்படுவதற்குமான காரணங்களை ஆராய வேண்டியதும் அவசியம் தான்.

ஆரம்பவகுப்பிலிருந்து ஒவ்வொரு பிள்ளைகளையும் வைத்தியர்கள் பரிசோதித்து அவர்கள் பாடசாலையில் படிக்கும்வரை அவர்களின் ஆரோக்கியம் பற்றிய 'விபரக் கோர்வை' வைக்கப்பட வேண்டும். ஒரு பாடசாலையில் இருந்து ஒரு மாணவர் வேறு பாடசாலைக்கு மாறிச் சென்றாலும் பட்டப்படிப்பு பெற பல்கலைக்கழகத்துக்குச் சென்றாலும் படிப்பை நிறுத்தி வேறு தொழிலுக்குச் சென்றாலும் அவரது உடல்நிலை அவருக்குச் சிறு வயதிலேயே இருந்த நோய் முதலிய விபரங்களை வைத்தியர்கள் சுலபமாகத் தெரிந்து அவரின் நோயைக் குணப்படுத்தவும் அந்த மாணவர் ஆரோக்கியமாக வாழவும் வழிசெய்யலாம்.

பாடசாலைகளில் பிள்ளைகளை அடிக்கடி பரிசோதனை செய்து மருந்து கொடுப்பதுடன் பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கான தகுந்த யோசனைகளை அவர்களின் பெற்றோர்களுக்கு எடுத்துக்கூறும் வழக்கம் முன்னர் இருந்தது. என்ன காரணத்தினாலோ இது அருகிவிட்டது. பட்டதாரி மாணவர்களின் ஆரோக்கியக் குறைவுபற்றி டாக்டர் விஜயதுங்கா விடுத்துள்ள எச்சரிக்கை பாடசாலைப் பிள்ளைகளின் உடல்நிலையில், ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த உதவவேண்டும்.

## இந்துசீன நிலைமை

இந்துசீனத்தில் நிலைமை மோசமாகி வருகிறது. தென்வியட்நாமிலிருந்து அமெரிக்கர் வெளியேறி விட்டால் தங்கள் பிரச்னைகளைத் தாங்களாகவே தீர்த்துக்கொள்ள வழி பிறக்குமென்று தென் வியட்நாம் மாணவர்களும் மற்றும் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். தென்வியட்நாமிலிருந்து கம்போடியாவுக்கு அனுப்பப்பட்ட சாண்டிகாட்டி அமெரிக்கர் அங்குசென்று அப்பாவி மக்களுக்குத் தொல்லை கொடுக்கின்றனர்

வியட்நாமிலிருந்து அமெரிக்கத்துருப்புக்கள் வெளியேறினால்தான் வியட்நாமில் அமைதித் தீர்வுஏற்படமுடியுமென செனட்டர் எட்வார்ட் கென்னடி கூறியிருப்பதும் இந்துசீனப் பிரச்னைக்கு நவசீனாவைப் புறக்கணி

# பிரெஞ்சு நாட்டின் தமிழ்ப்பணி

— ஆ. தேவராசன் —

**பிரெஞ்சு நாட்டின் தலைநகரான பாரிஸில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் 3-வது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு கருத்தரங்கை யொட்டி இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**

சாதாரணமாகக் குடியேற்ற நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்தும் நாடுகள் அடிமைப்பட்ட நாடுகளின் கலாச்சாரத்தை அழிப்பது வழக்கம். பிரெஞ்சு நாடு பாண்டிச்சேரியைக் கைப்பற்றியபின் அங்கிருந்த பிரெஞ்சுக்காரர்கள் பலர் தமிழையும் தமிழ்ப்பண்பாட்டையும் நாகரிகத்தையும்ஆராய்ச்சிசெய்தனர். தமிழ் ஆராய்ச்சிக்குப் பிரெஞ்சு நாடு செய்தசேவை அளப்பரியது. பத்தொன்பதாம் நூற்றுண்டு தொடக்கம்பிரான்ஸில் தமிழ்க் கல்வியில் ஈடுபாடு பிறந்தது.

யூஜின் பேர்னேவ் என்பவர் ஆரம்பத்தில் பகவத்கீதையையும், பௌத்தமத வரலாற்றையும் ஆராய்ந்து வந்தார். இதன் பின்னர் இவரது கவனம் தமிழ் நாட்டில் சென்றது. தமிழ் நாட்டுச் சமயக்கோட்பாடுகள், இந்து தெய்வங்கள் ஆகியவற்றை அவர் ஆராய்ந்து வந்தார். அதனூடாகத் தமிழர் நாகரிகத்தையும் ஆராய்ந்தார் இதுபற்றி பல கட்டுரைகளை அவர் எழுதியிருக்கிறார். இவருடைய தமிழ் ஆர்வம் அளவை மீறியதால் தன் மாணவரான எம். ஏரியல் என்பவரைத் தமிழ்ப்பணிக்கு அர்ப்பணிக்கும்படி வேண்டினார்

ஏரியல் தன் குருவையும் மிஞ்சிவிட்டார். தமிழாராய்ச்சியில் அதிகம் ஈடுபட்டார். இவர் புதுவையில் இருந்து தமிழ் கற்றதோடு தமிழையும் கற்பித்தார். இவர் செய்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் மலைபோலக் குவிந்திருந்தன. அவை அச்சேற முன்பு அவர் இறந்துவிட்டார். பாரிஸிலுள்ள ஆசிய சங்கம் சிலவற்றை வெளியிட்டது ஏனையவை இன்னமும் பாரிஸிலுள்ள தேசிய நூலகச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. திருக்குறளையும் இவர் பிரெஞ்சு மொழியில் பெயர்த்தார்.

இவரைத் தொடர்ந்து மூசே, டியூபி ஆகிய இருவரும் இணைந்து தமிழாராய்ச்சியில் செயற்பட்டனர். பெஸ்கியின் தமிழ் இலக்கணத்தைப் புதுக்கி வெளியிட்டார் டியூபி என்பவர். அத்தோடு பிறிதொரு இலக்கண நூலையும் வெளியிட்டார் இருவரும் சேர்ந்து பிரெஞ்சு — தமிழ் அகராதி ஒன்றை வெளியிட்டனர். டியூபி என்பவர் [illegible]யாகவேறு ஒரு அகராதியையும் வெளியிட்டார்.

இவர்களைத் தொடர்ந்து ஜூலியன் வின்சன் என்ற அறிஞர் மிகவும் பாடுபட்டார். இவர்தமிழ்மொழியை நன்கு கற்றார். தமிழ்மொழியின்—தமிழ் இலக்கியத்தின் சிறப்பை வெண்பாக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். பிறமொழிகளில் வெளியிடப்பட்ட தமிழ்பற்றிய கட்டுரைகளையும் பிரெஞ்சு மொழியில் வெளியிட்டார். ஜூலியன் வின்சன் சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகியவற்றைப் பிரெஞ்சு மொழியில் பெயர்த்தார். ஜூலியன் வின்சனின் மாணவரான ஜூல்ஸ் புளொக் என்பவர் தமிழ் ஆராய்ச்சிக்கு அரும்பணியாற்றியுள்ளார். இவர் பாரீஸ் பல்கலைக் கழகத்தில் திராவிட மொழியில் பேராசிரியராகக் கடமைபார்த்தார். தமிழ் நூல்கள் பிறமொழிகளில் நல்லமுறையில் வெளியிடப்படுவதை இவர் வரவேற்றுர் உற்சாகப் படுத்தினார். வி. ஆர். இராமச்சந்திர தீட்சிதரின் சிலப்பதிகார மொழிபெயர்புக்கு அளித்த முகவுரையில் இக்கருத்துகளைத் தெரிவித்துள்ளார்

பிரெஞ்சு நாட்டுத்தொடர்பால் பாண்டிச்சேரியில் வாழ்ந்தசிலதமிழர்கள்பிரெஞ்சு மொழியில் பாண்டித்தியம் பெற்றனர். ஞானதியாகு என்பவர் திருக்குறள், நாலடியார், கம்பஇராமாயணம் முதலியவற்றைப் பிரெஞ்சுமொழியில் பெயர்த்தார். தேசிகன் என்பவர் திருப்பாவையை பிரெஞ்சு மொழியில் பெயர்த்தார். வைத்தியகலாநிதி பரமானந்த மரியதாஸ் உதவியுடன் பிரெஞ்சு வைத்திய கலாநிதிகளான லியூஷியன், பைகொட் ஆகியோர் சித்த வைத்தியமுறையை ஆராய்ந்து தமது மருத்துவமுறைகளுடன்கலந்துகொண்டனர்.



தூரகிழக்கு, நாடுகளில் இந்திய கலாச்சாரத்தின் செல்வாக்கை ஆராயப் பல நிறுவனங்கள் பாரிஸில் நிறுவப்பட்டன பாண்டிச்சேரியிலுள்ள பிரெஞ்சிய இந்தியத்துறை நிலையம் இவற்றின் ஆக்க செயற்பாட்டிற்குப் பெரிதும் உதவிசெய்து வந்தது.

பேராசிரியர் பியரே மீலே என்பவர் பிறமொழிகளில் உள்ளி தமிழ்க்கடன் சொற்களைப் பற்றியும், தமிழ்நாகரீகத்தின் செல்வாக்கைப்பற்றியும் ஆராய்ந்துள்ளார்.

பிலிப்தியோல் என்பவர் கடல் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டார். தமிழ்மக்களின் கடற்துறைஈடுபாடு, திறமை பற்றி மிகவும்நுணுகி ஆராய்ந்த இவர் உலகில் தமிழரே மிகப்பழைய கடற்போக்குவரத்துச் சாதனையாள என்று குறிப்பிட்டுள்ளார் இவரது கருத்தை ஆதரிப்பதுபோல்இன்னொரு பிரெஞ்சு அறிஞரான சில்வியன் லெவி கருத்துத் தெரிவித்துள்ளார். இந்தியாவின் மூதாதையர் திராவிடர் என்ற கருத்தை அவர் தெரிவித்துள்ளார். ஜீன்பி றிசிலூஸ்கி என்ற பிரெஞ்சு அறிஞர் பிறமொழிகளிலுள்ள திராவிட கடன்சொற்கள்பற்றி ஆராய்ந்துள்ளார்.

தற்போது பாண்டிச்சேரியிலுள்ள பிரெஞ்சு இந்தியத் துறை நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஜீன் பிலியோசா தூரகிழக்கில் பரவிய திராவிட சமஸ்கிருத நாகரீகங்களின் செல்வாக்கை அளவிட்டுவருகிறார். திராவிட நாகரீகம் முந்தியது, செல்வாக்கானது என்ற கருத்தையும் தெரிவித்து வருகின்றார். பல கல்வெட்டுகளையும் கண்டுபிடித்து ஆராய்ந்து வருகிறார். இவரே அனைத்துலக தமிழராய்ச்சி மன்றத் தலைவருமாவார்'

இவ்வாறு பலவகையில் தமிழ் ஆராய்ச்சிக்குப் பணியாற்றிய பிரெஞ்சுநாட்டின் தலைநகரில் மூன்றுவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாடும் கருத்தரங்கும் நடைபெறுவது மிகவும் பொருத்தமாகும்

## "கட்டாய ஓய்வுப் பிரச்னையில் ஆசிரியர்களை உட்படுத்தாதீர்!'

### கல்வி அமைச்சருக்கு ஆசிரியர்கள் மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

''அண்மையில் பதவி உயர்வு கொடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் 55 வயதை அண்மியவர்கள் இவர்கள் நீண்டகாலமாக பதவி உயர்வுபெறுமலிருந்து பதவி உயர்வுபெற்றவர்கள் அவர்களை 55 வயதில் கட்

## பாடசாலையில் மதியபோசனம் 19-ம் திகதி ஆரம்பம்

கோட்டை, வியா.

## தோல் கூட்டுத்தாபனம்

## சப்பாத்து உற்பத்தியை அதிகரிக்கும்

கொழும்பு, வியாழன்

இலங்கை தோல் கூட்டுத்தாபனம் சப்பாத்து உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பெண்களுக்கான புது வகைச் செருப்புகளையும், [illegible]களுக்கான புதுரக சப்பாத்துக்களையும் தயாரிக்க திட்டம் தீட்டப்பட்

ஹம போன்ற இடங்களில் இந்த விற்பனவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

கைத்தொழில் அமைச்சுடன் கூட்டுத்தாபனம் தனியாரின் பொறுப்பில் இப்போது இருக்கும் தோல்

## இன்று எஸ். ஜே. வி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக தமிழ்ப் பிரமுகர்களுக்கு அனுப்பியுள்ள அழைப்பில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்'

அந்த அழைப்பில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: பிரதமர் அரசியல் நிர்ணய சபையொன்றுநிறுவி புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி செயல்படுத்த ஆட்சிமன்ற உறுப்பினர்களின் கூட்டமொன்றைக் கூட்டியிருக்கிறார்.

அரசியலமைப்பு எப்படியாக இருக்கும் என்பதுமே க்கு தெரியவில்லை. இவ் விஷயத்தையிட்டு தமிழ்மக்கள் ஆலோசிக்கவேண்டும்.

## மகாநாட்டில்தமிழ்காங்கிரஸ் கலந்து கொள்ளாதாம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சட்டநிருபண சபை பற்றி ஆலோசனை செய்வதற்காகத் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் இன்று கொழும்பில் கூடும் மகாநாட்டில் தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்றக் குழு கலந்துகொள்ளாது.

மேற்கண்ட தகவலை கிளிநொச்சி எம். பி திரு. வி. ஆனந்தசங்கரி நேற்றுத் தெரிவித்தார். பிரதமர் இம் மாதம் 19-ம் திகதி கூட்டும் சட்ட நிருபண் சபையின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தமிழ்க்காங்கிரஸ் ஆட்சி மன்றக்குழு கலந்துகொள்வதா? இல்லையா? என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

திரு செல்வநாயகம் கொழும்பில் கூடும் மாநாடு ஓர் அரசியல் தந்திரம் என்றுதாம் திரு. செல்வநாயகத்திற்கு அனுப்பியுள்ள பதிலில் தெரிவித்துள்ளதாக கிளிநொச்சி எம். பி. கூறினார்.

''பொதுவாகப் பெரும்பான்மைத் தமிழ் மக்கள் விரும்பாத சமஷ்டிக்கொள்கையைத் தாங்கள் கைவிடும் வரை இதுசம்பந்தமாகக் கூட்டும் மகாநாட்டில் கலந்து கொள்வதை எமது இனத்தின் பெரும்பகுதியினர் அனுமதிக்க மாட்டார்கள் என்றும் இதுவெறும் அரசியல் தந்திரம் என்றும் நான் கருதுவதால்மகாநாட்டில் கலந்துகொள்ளாத நிலையையிட்டு வருந்துகின்றேன்.

இது சம்பந்தமாக வேறு எந்த தனிநபர் கூட்டும் மாநாட்டிலும் கலந்து பூரண ஒத்துழைப்பு கொடுக்கதயாராக இருக்கிறேன் என்ற தாம் எழுதியகடிதத்தில் திரு. செல்வநாயகத்துக்குத் தெரிவித்திருப்பதாக திரு. ஆனந்தசங்கரி கூறினார்.

## இருவர் கைது

மாவிட்டபுரம், வியா.

## அமைச்சின் செலவை ஆராய கமிட்டி

கோட்டை, வியாழன்

அடுத்த செப்டம்பர் மாதத்திலிருந்து ஒவ்வொரு அமைச்சின் செலவினங்களை பரிசோதனை செய்வதற்கு ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம் வெள்ளி

சுதுமலைவடக்கு ஈஞ்சடி வைரவர் கோவில் தேர் வெள்ளோட்ட விழாவும் தேர்த் திருவிழாவும் இன்று காலை நிகழும். மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

## "தடை செய்க"

அம்பன், வியா.

குடத்தனைக்கரையூர்ரோட்டில் போடப்பட்டிருக்கும் லொறித்தடையை இராணுவத்தினரின் ரோந்து லொறி செல்வதற்காக அகற்றப்பட்டதைத் தொடர்ந்து மண் ஏற்றிச் செல்லும் லொறிகளின் எண்ணிக்கைநாளொன்றுக்கு பத்துக்குமேற்பட இருப்பதாகவும் இதனால் ரோட்டு மோசமாகப்பழுதடைவதாகவும் இவற்றினை தடைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் குடத்தனைக் கிராமசபைத் தலைவர் வடமராட்சிகாரியாதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

## இலக்கியப் போட்டி

கோட்டை, வியா.

தொழிற் திணைக்களத் தமிழ்க்கழகம் செப்டம்பர் மாதம் நடத்தவிருக்கும் முத்தமிழ்விழாவையொட்டி சிறுகதை, கவிதை கட்டுரைப் போட்டிகளை நடாத்தவிருக்கிறது. ஆசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறக்குமென்று தென்வியட்நாம் மாணவர்களும் மற்றும் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். தென்வியட்நாமிலிருந்து கம்போடியாவுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க துருப்புக்கள் கூட தென்வியட்நாமுக்குத்தான் திரும்பி வந்திருக்கின்றனவே யொழிய அமெரிக்காவுக்குப் போய்ச் சேரவில்லை.

இந்துசீனத்திலிருந்து அமெரிக்கர் வெளியேறிவிடவேண்டுமென்ற வற்புறுத்தல் அதிகரித்துவருகிறது. இந்துசீனத்தில் அமெரிக்கர் இருப்பதை அமெரிக்கர்களே விரும்பவில்லை ஆயினும் அமெரிக்க அரசாங்கம் இதற்கு இணங்குவதாயில்லை.

நவசீனுவின் ஆதிக்கம் பரவிவிடுமென்று பூச்சியேறினல்தான் வியட்னுமில் அமைதித் தீர்வுஏற்படமுடியுமென செனட்டர் எட்வார்ட் கென்னடி கூறியிருப்பதும் இந்துசீனப் பிரச்னைக்கு நவசீனுவைப் புறக்கணித்துவிட்டுத் தீர்வுகாணமுடியாதென்று பிரஞ்சு வெளியுறவு மந்திரி கருத்துத் தெரிவித்திருப்பதும் முக்கியமானதாகும்

சகல பிரச்னைகளுக்கும் பேச்சு வர்த்தைமூலம் தீர்வுகாண முடியுமென்பதில் நம்பிக்கையிருக்குமானல் கம்போடியா, வியட்னும் ஆகிய இடங்களிலிருந்து அந்நியத் துருப்புகள் வெளியேறி நவசீனம் உட்பட சம்பந்தப்பட்ட நாடுகள் கூடிப் பேசுவது பயனளிக்கும்.

"அண்மையில் பதவி உயர்வு கொடுக்கப்பட்ட ஆசிரியர்கள் பலர் 55 வயதை அண்மியவர்கள் இவர்கள் நீண்டகாலமாக பதவி உயர்வுபெருமலிருந்து பதவி உயர்வுபெற்றவர்கள் அவர்களை 55 வயதில் கட்டாய ஓய்வுபெறவேண்டிய நிர்ப்பந்தத்துககுள்ளாகியமையால் அவர்கள் உச்சச் சம்பளத்தை பெறமுடியாத துர்நிலையுண்டாகும் இந்த நிலைமாற்றப்படவேண்டும்"

இவ்வாறு இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சருக்கு அனுப்பிய மகஜர் ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஐம்பத்தைந்து வயதுடன் திடீரென அரசாங்க வேலையிலிருந்து விலக்கப்படுவார்கள் என்ற விஷயம் பற்றிய ஆலோசனைக்குப் பின்னர் ஆசிரியர் சங்கம் இவ்வறிக்கையை அனுப்பியுள்ளது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கும் கோரிக்கைகள் சில வருமாறு:

ஆசிரியர் பிரச்னைகள் அரசாங்க சேவையாளர் பிரச்னைகளிலும் வேறுபாடானவையாவையினுல் ஆசிரியர்களின் நியமனப் பதவி உயர்வு இவற்றைக் கவனிக்க ஆசிரிய சேவைக் கமிஷன் ஒன்றுவேண்டும்.

ஏனைய அரசாங்க சேவையாளர் ஆரம்பகாலத்திலிருந்தே கூடிய சம்பளம், பதவிஉயர்வு, பென்ஷன், விதிகள் போன்ற சலுகைகளை அனுபவித்துள்ளனர். ஆசிரியர்களுக்கு அண்மைக் காலத்திலேதான் இச்சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன ஆகவே இருசாராரையும் ஒரே சட்டத்தின்கீழ் கொண்டுவந்து 55 வயதில் ஓய்வுபெறச் செய்வது நியாயமாகாது

## பாடசாலையில் மதியபோசனம் 19-ம் திகதி ஆராயப்படும்

கோட்டை, வியா. இம்மாதம் 19-ம் திகதி தேசிய தமிழ்ப் பாடசாலை சுகாதார ஆலோசனைச்சபை கூடும்போது, பாடசாலைகளில் இலவசமாக வழங்கப்படும் மதியபோசனம் பற்றி ஆராயவிருக்கிறது.

ஜப்பானில் பாடசாலைக் குழந்தைகளுக்கு எல்-லிஸ்ஸின் எனப்படும் சத்துணவு வழங்கப்படுவதாகவும் இதுபோன்று இலங்கையிலுள்ள பாடசாலைக் குழந்தைகளுக்கும் வழங்குவது மேற்படி சபை ஆராயும்.

அத்தோடு தேசிய கலாச்சாரத்தை யொட்டிய யூனிபோம் உடையை பாடசாலை குழந்தைகள் அணிவது பற்றியும் இச்சபை ஆராயுமாம்

மயிலிட்டி கி. ச.

## இரு வட்டாரங்களில் இன்று இடைத்தேர்தல்

யாழ்ப்பாணம், வெள்ளி மயிலிட்டி கிராம சபையின் 5-ம், 14-ம் வட்டாரங்களுக்கான இடைத் தேர்தல் இன்று நடைபெறவிருக்கிறது.

மேற்படி வட்டாரங்களில் அங்கத்தவர்களாக இருந்தவர்கள் அரசாங்க பதவி பெற்று சென்றுள்ளதையடுத்து இவ்விடைத்தேர்தல் நடக்கவிருக்கிறது. போட்டியிடவிருப்போர் விபரம் பின்வருமாறு:

14-ம் வட்டாரம்- சபாபதி கந்தசாமி, செல்லப்பா மகேஸ்வரன்

5-ம் வட்டாரம்- மயில்வாகனம் சபாரத்தினம், நல்லிக்குட்டி அப்புத்துரை, தெய்வேந்திரம் துரையப்பா, சின்னையா மனோரஞ்சிதம், தம்பன் நவரத்தினம்.

(மா. வி. நி)

திமை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

பெண்களுக்கான புதுவகைச் செருப்புகளையும், குழந்தைகளுக்கான புதுரக சப்பாத்துக்களையும் தயாரிக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது

கொழும்பில் பல விற்பனைக் கிளைகளையும் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கவிருக்கிறது. பேறளை, வெள்ளவத்தை, நுகேகொட, மகரஹம போன்ற இடங்களில் இந்த விற்பனவு நிலையங்கள் ஆரம்பிக்கப்படும்.

கைத்தொழில் அமைச்சுடன் கூட்டுத்தாபனம் தனியாரின் பொறுப்பில் இப்போது இருக்கும் தோல் விநியோகப் பொறுப்பை பொறுப்பேற்பது சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளது.

## நாட்டுக் கூத்து

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாண ஆசனக் கோவில் இளைஞர் மன்றம் எதிர்வரும் 19-ம் திகதி எரோடியான் சபதம் என்னும் நாட்டுக்கூத்தை நடித்துக்காட்ட இருக்கிறர்கள். அர்ச் சஞ்யுவாமின் வாழ்க்கைச் சரித்திரத்தை மையமாகக்கொண்ட இந்த நாட்டுக்கூத்தை கலாநிதி ம. யோசேப்பு தயாரித்துள்ளார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த நாட்டுக்கூத்து யாழ்ப்பாண மேற்றிராணியார் வண பிதா எமிலியானஸ்பிள்ளையின் தலைமையில் ஆசனக்கோவில் திறந்த வெளியரங்கில் நடைபெறுகின்றது (ஆ. நி)

சாரண வைர விழாவில்

## இளவாலை. ம. வி. மாணவிகள்

பண்டத்தரிப்பு, வியா. கொழும்பில் நடைபெறவிருக்கும் சாரணர் வைர யூபிலி விழாவில் இளவாலை மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 6 மாணவிகள் கலந்து கொள்ளவிருக்கின்றனர்

## இராமநாதன் கலைக்கழகம் தீர்மானம்

கொடிகாமம், வியாழன் கச்சாய் கிராமசபை முன்னள் உபதலைவர் கனகரத்தினத்தின் மறைவையொட்டி இம்மாத இறுதியில் கொடிகாமத்தில் . நடைபெறவிருந்த கலைவிழாவைப் பின்போடுவதென நேற்று நடந்த இராமநாதன் கலைக்கழக கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு எஸ். எம். கமலநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கொடிகாமத்தில் ஒரு நிரந்தர பொலிஸ் நிலையம் நிறுவும்படி பொலிஸ் அதிபரை கோருவதென்றும் தீர்மானிக்கப் பட்டது. கனகரத்தினத்தின் மறைவு குறித்து அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப் பட்டது.

## 'டீ. டீ. ரி தெளிக்க வேண்டாம்'

### எம்.பி.க்கு மகஜர்

ஊரதீவு, வியாழன் மலேரியாத்தடை இயக்கத்தினர் வீடுகளில் டீ டீ. ரி. தெளிப்பதன் மூலம் எமது கிராமத்திலுள்ள வீடுகளில் மூட்டைப்பூச்சிகள் பெருகிப் பெருந்தொல்லைகளை விளைவித்துக் கொண்டிருக்கிறது டீ டீ. ரி. தெளிப்பதன்மூலம் ஒருவிதமான புழுவும் உற்பத்தியாகி வீடுகளின் கூரையைச் சேதப்படுத்துகிறது. இரண்டு வருடத்திற்கு ஒருமுறை வேயப்படுகின்ற வீடுகள் ஆறு மாதத்திற்கொருதடவை வேயவேண்டிய கட்டத்தில் எமது வீடுகள் இருக்கின்றன. இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு டீ. டீ. ரி தெளிப்பதை நிறுத்துவிக்கவும்.

மேற்கண்டவாறு கோரும் மகஜரொன்றை தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா. பொ. இரத்தினத்திடம் ஊரதீவு மக்கள் கையளித்துள்ளனர்,

மிருசுவில்

## பெண்கள் குடியேற்றத் திட்டம்

கொடிகாமம், வியாழன் மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்தில் மிளகாய் உற்பத்தி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதைவிட இராசவள்ளி கொடிமுந்திரி போன்றபயிர்களுக்கும் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. குடியேற்றத் திட்டத்திலுள்ள படித்தபெண்கள் அனைவரும் பயிர்ச்செய்கையில் மிகவும் ஆர்வம்காட்டி வருகின்றனர்.

தற்போது இக் குடியேற்றத் திட்ட நிலத்தில் புதிய இன மிளகாய் உற்பத்தி செய்வதற்கு ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கிறர்கள். இந்த இனம் குறைந்த நாட்களில் கூடிய வருவாயைத் தரக்கூடியதாம்.

துக்குத் தெரிவித்திருப்பதாக திரு, ஆனந்தசங்கரி கூறினர்.

## இருவர் கைது

மாவிட்டபுரம், வியா. சட்டவிரோதமாகஹோட்டல் ஒன்றில் மதுபானவகை விற்றதாக இருவரை காங்கேசன்துறை பொலிசார் கைது செய்துள்ளனர்

கீரிமலையில் உள்ள ஒரு ஹோட்டலில் சட்டவிரோதமாக சாராயம் பியர் போன்ற மதுபானங்கள் விற்பதாகக் கிடைத்த ஓர் இரகசியத்தகவலை யடுத்து காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு ஆர். ஜே. ஜேக்கப் தலைமையில்சென்றபொலிஸ் கோஷ்டி அங்கு திடீர் சோதனை நடாத்தியதையடுத்து இருவரைக்கைது செய்தனர். விசாரணை நடைபெறுகிறது.

## தற்கொலை

மாவிட்டபுரம், வியாழன் வாழ்க்கையில் வெறுப்புற்றவர் நச்சுத்திராவகம் அருந்தி உயிரை மாய்த்த சம்பவம் ஒன்று நேற்று குரும்பசிட்டியில் நடந்துள்ளது. மயிலிட்டி தெற்கு குரும்பசிட்டியைச் சேர்ந்த சுருட்டுத் தொழிலாளியான கந்தையா அருளம்பலமே இப்படி உயிரை மாய்த்தவராவார்.

அருளம்பலத்தின் மரணம் குறித்து மயிலிட்டி - கட்டுவன் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. என். நாகலிங்கம் ஸ்தல விசாரணை நடாத்தினர்.

இவர் நோய்வாய்ப்பட்டிருந்ததால் வாழ்க்கையில் வெறுப்புற்றுநஞ்சு அருந்தியிருக்கலாம் என விசாரணையின்போது சாட்சியம் அளித்தவர்கள் தெரிவித்தனர்.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## கல்வி பதில் மாஅதிபர் யோசனை

கோட்டை, வியாழன் "ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் செய்முறைப் பரீட்சையை நீக்கிவிடவேண்டும்" என கல்வி பதில் மா அதிபர் திரு. அலஸ் யோசனை கூறியுள்ளார்

இவர் கருத்துப் பற்றி பல்கலைக்கழகப் பேராசிரியர்களும், கல்லூரி அதிபர்களும் வெவ்வேருன அபிப்பிராயங்களைத் தெரிவித்துள்ளனராம்.

தமிழ்க்கழகம் செப்டம்பர் மாதம் நடத்தவிருக்கும் முத்தமிழ்விழாவையொட்டி சிறுகதை, கவிதை கட்டுரைப் போட்டிகளை நடாத்தவிருக்கிறது. ஆசிரியர்கள் கூட்டுத்தாபனங்கள் முதலிய அரசாங்க நிறுவனங்களின் ஊழியர்கள் இதில் பங்குபற்றலாமாம்.

## தென் புலோலி உபயகதிர்காம தீர்த்தம்

யாழ்ப்பாணம், வெள்ளி தென்புலோலியில் வல்லிபுரக் கோவிலுக்கு வடமேற்கே ஒருமைல் தொலைவிலுள்ள உபயகதிர்காமத்தில் இம்மாதம் 20-ம் திகதி கதிர்காமத் தீர்த்தவிழா நடைபெறும். வருடாவருடம் கதிர்காம தீர்த்த உற்சவத்தின்போது இவ்வுபய கதிர்காமத்திலும் தீர்த்தத் திருவிழா கொண்டாடப் பட்டு வருகிறது. அன்று இரவு பல இசை நிகழ்ச்சிகள் நடைபெறவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

## சுவீப்முடிவுகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 29 K 0605 | 30 K 0149 |
| 10 L 0318 | 20 L 0041 |
| 27 A 0443 | 26 A 0974 |
| 09 B 0909 | 17 B 0546 |
| 35 C 0415 | 02 D 0318 |
| 35 E 0325 | 09 E 0282 |
| 07 F 0918 | 37 F 0932 |
| 05 F 0300 | 05 G 0632 |
| 06 G 0164 | 36 H 0694 |
| 02 H 0230 | 40 J 0115 |
| 19 K 0671 | 12 K 0899 |
| 26 L 0974 | 36 L 0355 |
| 01 U 0769 | 06 D 0058 |
| 09 L 0730 | 40 M 0494 |
| 04 N 0756 | 35 O 0612 |
| 32 O 0402 | 33 O [illegible]509 |
| 38 P 0404 | 37 P 0447 |
| 05 Q 0122 | 34 R 0498 |
| 37 R [illegible]653 | [illegible]9 R 0459 |
| 21 R 0205 | 39 S 091[illegible] |
| 28 T 0437 | 29 T 0549 |
| 15 U 050[illegible] | 39 U 0572 |
| 36 U 0560 | 09 V 0128 |
| 04 V 0887 | 17 W 0[illegible]28 |
| 14 W 0954 | 17 X 0134 |
| 26 X 0271 | 16 X 0102 |
| 3[illegible] Y 0980 | 01 Z 0983 |
| 04 Z 0978 | 32 L 0732 |
| 06 N 0492 | 09 O 0629 |
| 17 O 0819 | 18 P 0678 |
| 35 P 0899 | 26 Q 0290 |
| 33 R 0168 | 20 R 0692 |
| 11 R 0878 | 3 S 0568 |
| 18 T 0075 | 09 T 0063 |
| 40 U 0837 | 30 U 0590 |
| 40 V 0468 | 33 V 0469 |
| 37 W 0301 | 02 W 0472 |
| 33 X 0104 | 11 X 0678 |
| 10 Z 0638 | 30 Z 0056 |

[இவை யாவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்]

# காங்கேசன்துறை நகர அபிவிருத்திக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி காங்கேசன்துறை நகரத்தை அபிவிருத்திசெய்ய காங்கேசன்துறைபட்டின சபைத் தலைவர் திரு ஜெயபாலசிங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

குழந்தைகள் பூங்கா ஒன்றையும், வசதிகள் நிறைந்த சனசமூக நிலையமொன்றையும் அமைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன

சுமார் எண்ணுயிரம் ரூபா செலவில் குழந்தைகள் பூங்காவையும், இரண்டாயிரம் ரூபாசெலவில் சனசமூகநிலையத்தையும் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள திறந்த வெளியரங்கைப் போன்று நவீன வசதியுள்ள திறந்தவெளியரங்கை நிறுவவும் பட்டினசபைத் தலைவர் திட்டமிட்டுள்ளார்.

## வருடாந்தக் கூட்டம்

சுழிபுரம், வியாழன் தேசிய அரசாங்கசுகாதார சேவைத் தொழிலாளர்சங்க 5-வது வருடாந்தக் கூட்டம் சங்கத்தலைவர் திரு. பொ. தேவராசா தலைமையில் இம்மாதம் 25-ம் திகதி நடைபெறவிருக்கிறது. யாழ். எம். பி., நல்லூர் எம். பி உட்படப் பல பிரமுகர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

## இடமாற்றம்

கோட்டை, வியாழன் கொழும்பு விவேகானந்த மகா வித்தியாலயத்தில் உப அதிபராகச் சில காலம் கடமையாற்றிய திரு வ. சண்முகராசா இம்மாதம் 1-ம் திகதி தொடக்கம் கொழும்பு இந்து கனிஷ்ட மகாவித்தியாலய உப அதிபராக இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார், கொழும்பு விவேகானந்தாவில் இவர் ஒன்றரை மாதங்கள் பணியாற்றினர்.

கொழும்பு இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்ருேர் ஆசிரியர் சங்கத்தின் முயற்சியினுலேயே இம்மாற்றம் நடைபெற்றதாக அறியப்படுகின்றது.

இவர் யாழ்ப்பாணம் திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் பல ஆண்டு காலம் உடற்பயிற்சிப்போதனசிரியராகவும் உரும்பராய் இந்துக்கல்லூரி காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வல்வை சிதம்பராக் கல்லூரி ஆகியவற்றில் கணித விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார்,

வலிகாமம் வடக்குஆசிரியர் சங்கத்தின் உபகாரியதரிசியாகவும் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றிய இவர் தேசிய ஆசிரியர் சங்கத்திலும் சிலகாலம் முக்கியபதவிகளை வகித்துள்ளார்.

## மகாநாடும் கூட்டமும்

மூதூர், வியாழன் திருக்கோணமலை மாவட்ட அரசினர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் 5-வதுவருடாந்த மகாநாடும் பொதுச் சபைக் கூட்டமும் இம்மாதம் 18-ம் திகதி மூதூர் புனித அந்தோணியார் வித்தியாலயத்தில் நடைபெறவிருக்கின்றன. முற்பகல் நிகழ்ச்சிகளுக்கு சங்கப் பொதுத் தலைவர் திரு. சி. நடராசாவும், பிற்பகல் நிகழ்ச்சிகளுக்கு சங்க உபதலைவர் திரு. பி. நிக்கொலஸும் தலைமை வகிப்பர் தகவல் ஒலிபரப்பு உதவிஅமைச்சர் ஜனுப் ஏ. எல். ஏ. மஜீத், திருமலை எம். பி. நேமிநாதன், மூதூர் 2-வது எம். பி. திரு ஏ தங்கத்துரை ஆகியோருட்பட கல்வி அதிகாரிகள் ஆசிரிய சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரையாற்றுவர்


## மரண அறிவித்தல்

### தம்பாபிள்ளை இராமுப்பிள்ளை J. P.

திருநெல்வேலி வடக்கச் சேர்ந்த மலாயன் பென்ஷனர் திரு: தம்பாபிள்ளை இராமுப்பிள்ளை J. P. காலமாகி விட்டார். அன்னரின் மரணச்சடங்குகள் இன்று (17-7-70) மாலை 3 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும். நண்பர்களும் உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும் 2129



இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜுலை மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org